Regd. No. M. 4900. 16-பக்கங்கள். தனிப்பிரதி விலை 0-2-0.

# குடி அரசு

ESTD. 1924

வருட சந்தா உள்நாடு ரூ. 7-0-0. வெளிநாடு ரூ. 9-0-0.

மாலை 21 ஈரோடு 19-6-1948 சனிக்கிழமை மலர் 41.

## 1—7—48

## திராவிடநாடு பிரிவினை நாள்.

★

திராவிடர் கழகத் தோழர்களே !

திராவிடன், திராவிடமொழி, திராவிட நாகரிகம் என்ற எண்ணம் மக்களுக்கு ஏற்படவும், திராவிடநாடு தனி நாடாக வேண்டியும் கழகத் தோழர்கள் 1–7–48ந் தேதியை ஓர் முக்கிய நாளாகக் கொள்ளுங்கள். அன்று நாள் முழுதும் இரவின் முற்பகுதியும் கழக வேலைகளையே எல்லாத் தோழர்களும் மேற்கொள்ளவேண்டும்.

### செய்யவேண்டியவை:—

1. நகரங்களிலும், கிராமங்களிலும் கூட்டம் கூடி தூத்துக்குடி மாநாட்டுத் தீர்மானங்களைப் படித்து மக்களுக்கு விவரமாய் எடுத்துச் சொல்லுங்கள்.

2. கழகத் தோழர்கள் தங்கள் வீடுகளில் கழகக் கொடியைப்பறக்க விடுங்கள்.

3. கழகத் தோழர்கள் ஆண்களும், பெண்களும் நாள் முழுதும் கருப்பு ஆடை அணியுங்கள்.

4. காலையில் 7-மணிக்கெல்லாம் கொடி பறக்கவிட்டு, கருப்பு ஆடை அணிந்து முற்பகல் முழுதும் தோழர்கள் வீடுவீடாய்ச் சென்று கழகத்தின் கொள்கைகளைச் சொல்லி மக்களுக்கு அறிவும் உணர்ச்சியும் ஊட்டுங்கள். பிற்பகல் 5-மணிக்கு ஆடம்பரமில்லாது, ஊர்வலமுமில்லாது, வெளியூர் அன்பர்களையும் அழைக்காது, பணச்செலவுமில்லாது, கூட்டம் கூடி திராவிடநாடு எது, திராவிட மக்கள் யாவர், ஏன் திராவிடநாடு தனித்திருக்க வேண்டும் ஆகிய பொருள்கள்பற்றிப் பேசுங்கள். தூத்துக்குடி மாநாட்டுத் தீர்மானங்களையும் படித்து விளக்கிச் சொல்லுங்கள்.

**குறிப்பு:—கொடியேற்றும் விஷயத்தில் ஒருவித சச்சரவும் வைத்துக்கொள்ளக் கூடாது. கழகத்தினர் அமைதியையும், பொறுமையையும் கையாளவேண்டும்.**

தி. பொ. வேதாசலம்.

# மகளிர் நிலை!

★

ஒரு நாடு நன்மைகள் பல பெற்றிருந்தும் பாழாவதற்குக் காரணம் பெண் அடிமையே! ஆண் மக்களின் வீரமும், வெற்றியும், சிறப்பும் தாய்மார்களின் கையகத்தே தான் அடங்கிக்கிடக்கிறது. இளமைப் பருவத்திலே ஒருத்தி, தன் மைந்தனுக்கு வீரஉணர்ச்சி ஊட்டி வளர்த்து வந்தாளாயின் அவன் வாழ்க்கை வளம் பெறுவதுடன், களங்கள் பலவற்றிலே (எக்களமாயினும்) புறமுதுகிடாது வாகை சூடும் சூரனாகவும் திகழ்வான்.

முன்னாளிலிருந்து வீரத்திற்குப் பெயர்வாய்ந்த நமது தமிழகத்தில், இன்றையத் தாய்மார்கள் தம் குழந்தைகளுக்குப் பேய், பிசாசு, என்று கூறி அதைரியத்தைப் புகுத்துகிறார்கள். இதனாலன்றோ பாரதியார்

"கண்களிரண்டிருந்தும்
காணும் திறமையற்ற
பெண்களின் கூட்டமடி—
கிளியே
பேசிப் பயனென்னடி"

என்று கூறிப் பரிதாபமும், மனச்சோர்வும் அவர்கள்பால் காட்ட நேர்ந்தது.

கரையான் அரித்த "பழங்கதைகள்" "புராணப் புழுதிகள்" "துவேஷம் நிறைந்த வேதங்கள்" "பேதப்படுத்தும் சாஸ்திரங்கள்" "இழிவைத் தரும் இதிகாசங்களால்" மக்கள் அறிவுக்கு, வாழ்வுக்கு ஒவ்வாதன பல. பழந்தமிழ் இலக்கிய நூல்களான அகநானூறு, புறநானூறு முதலிய மத சம்பந்தமற்ற, தமிழர்கள் தனிப் பண்பைக் குறிக்கும் பெருநூல்கள் உள. அவைகள் பண்டைத் தமிழனின் வாழ்க்கைச் சிறப்பைக் காட்டும் காலக் கண்ணாடிகள்.

அவைகளை அறிந்தால் அக்காலத்தில் பெண்ணுரிமையும் பெண்ணறிவும் எங்ஙனம் உச்ச நிலையில் இருந்தது என்பது தெற்றென விளங்கும். இன்றும் பெயரளவில், "அகமுடையாள்" (வீட்டுக்குடையவள்) என்று அழைப்பினும் செயலில்-சட்டத்தில் உரிமை மறுக்கப்பட்டிருக்கிறது. கல்வியோ அவர்களுக்குக் குறைவே. ஏட்டில் காணப்படும் இச்சீரிய பண்புகள் சோற்றுத் துருத்திகளானமேனி மினுக்கிகள் (ஆரியர்கள்) தமிழகத்தில் புராணங்களைப் புகுத்திய காலத்திலேயே அழிந்து பட்டது என்பது தமிழ் நூல் கண்டவர்களுக்குத் தெளிவாகும்.

சிறப்புடன் திகழ்ந்த தாய்மார்கள், கொண்ட கொள்கையைச் சிறிதளவும் நழுவவிடாது "இடும்பைக்கு இடும்பை படுப்பர், இடும்பைக்கு இடும்பை படாதவர்" என்ற இன்பத் தமிழ் மறைக்கு இலக்கணமாக இலங்கினர். வீரமற்ற கோழைகள் மாய்ந்தொழிவதே மாண்புடையது என்ற பொதுநோக்குடையவர்கள்.

"சிற்றில் நற்றூண் பற்றி
நின்மகன் யாண்டுளன்"

என்று வினவிய ஒருவனுக்கு கூறிய விடைஎத்துணைவீரம் செறிந்ததெனக் காண்மின்!

"யாண்டுளன் ஆயினும்
அறியேன் ஒரும்
புலி சேர்ந்து போகிய
கல்லளை போன்று
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன் மாதோ
போர்க்களத்தானே"

என்மகன் எங்குளன் என்றா கேட்கிறாய்! அது அறியேன்! ஆனால் ஒன்றும் மாத்திரம் கூற முடியும்! என் வயிறு புலிவசிக்கும் குகைபோன்றது. புலிகுகையைவிட்டு எங்கு செல்லும்? வேட்டைக் கன்றோ? அதுபோல் மைந்தன்வீரம்புரியச் சென்றிருப்பான்" என்று வீறுடன் பதிலுரைக்கிறாள்.

இன்று நாம் என்ன காண்கிறோம்?'அய்யா இருக்கிறாரா?என்றால் வெளியே போயிருக்கிறார் என்று சொல்லுடாதம்பி என்று என்று ஒரு குரல் தம்பியிடம் கூறும்.

கணவன், தந்தை, கொழுநன் இவர்களை வெஞ்சமரில் பறிகொடுத்த மகள் ஒருத்தி 'செருப்பறை'(போரொலி)கேட்டு,தன்குல விளக்கான அன்புச் செல்வனை அழைத்து வேல் கைக்கொடுத்து வெற்றி சூட அனுப்புகிறாள். என்னே அவளின் ஆண்மை!

மறத்தினுமன்றி மாட்சிமை பொருந்திய ஆட்சிபுரிவதினும் வெற்றியுடன் விளங்கினர் மாதர்கள். இத்தகைய வீராங்கனைகளின் வழித் தோன்றலாகிய வனிதையர்களே. இன்று சீவிச் சிணுக்கெடுத்து 'டால்' அடித்துத்திரிவதிலே சிந்தனையைச் சிதறுகிறார்கள்.

இவர்களது வீர ஒலிகள் உரிமை ஒலிகளுடன் ஒலிக்கப்பட்டால், இன்பத்திராவிடம் எழிலுடன் விளங்கும் என்பதில் கிஞ்சித்தேனும் அய்யப்பாடுண்டோ?

"மிவாஸ்கி தாசன்"

## இளைஞர் கழகம்.

இராசிபுரம் 27—5—48 ம் நாள் மாலை 7-மணிக்கு வி. எஸ். வருதப்பன் இல்லத்தில் திருக்குறள் ஆட்சி ஆசிரியர் ஆர். கே. அரங்கசாமி தலைமையில் திராவிட சீர்திருத்த இளைஞர் கழகம் ஆரம்பிக்கப்பட்டது. கழகத்தின் அவசியமும் நோக்கமும் பற்றி வி. எஸ். வருதப்பன், எ. வி. பழனிசாமி, டி. நாராயணசாமி; எஸ். கே. முத்து, ஆ. செங்கோடன், க. சுப்பராயன் முதலியோர் பேசியபின், நிர்வாக கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டது. பல தோழர்களால் திராவிடக் கழகப் பத்திரிக்கைகள் நன்கொடையாக வாங்கி அளிப்பதாகக் கூறப்பட்டது. நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிந்தது.

29—5—48 ம் நாள் மாலை 5-மணிக்கு செம்மலைப்படையாச்சி தெருவில் திராவிட சீர்திருத்த இளைஞர் கழகத்தாரால் பொதுக்கூட்டம் நடைபெற்றது ஆர். கே. அரங்கசாமி தலைமை வகித்தார். வி. எஸ். வருதப்பன், கே. எம். பெருமாள், டி. நாராயணசாமி, வெங்கட்டேசன் (கம்யூனிஸ்ட்) முதலியோர்கள் திராவிடகழக நோக்கங்களைப் பற்றிப் பேசியபின் ஆ. செங்கோடன் அவர்களால் நன்றிகூற 10 மணிக்கு கூட்டம் முடிவுற்றது.

★

## திருமணம்.

லால்குடி தாலூகா ஆலம்பாடிக் கிராமத்தில் 11—6—48 ம் நாள் டால்மியாபுரம் தோழர் கெ. கோபாலசாமி தலைமையில் தோழர்களான பழனிச்சாமிக்கும்—செல்லம்மாளுக்கும் சீர்திருத்த முறையில் சிறப்பாகத் திருமணம் நடந்தது.

மதுரை மாவட்டம் பழனி தாலூகா தேவத்தூரில் தோழர் ல. கருப்பணன் தலைமையில் தோழர்களான அழகம்மாள்—முத்து வாழ்க்கை ஒப்பந்தம் 9—6—48 ல் நடைபெற்றது.

ஆவராணியில் தோழர்களான எம். பி. சிவம்—கனகாம்புசம் அம்மையாரின் வாழ்க்கை ஒப்பந்தம் நாகை வழக்கறிஞர் தோழர் டி. கே. விஜயராகவலு பி. ஏ. பி. எல். அவர்கள் தலைமையில் 3—6—48 ம் நாள் நடைபெற்றது.

# ★ இந்து மதம். ★

இந்து மதம் என்று ஒன்று குறிப்பாக இல்லை என்று காந்தியாரே ஒப்புக்கொள்ளுகிறார்.

இந்தியாவுக்கு மகமதியர்கள் முதலிய அயல் நாட்டார்கள் வந்த காலத்தில் இந்தியாவில் உள்ள பல்வேறு தேச வகுப்பு மக்கள் நடந்துகொண்டு வந்த நடவடிக்கைகளுக்கும் பழக்க வழக்கங்களுக்கும் பல்வேறு சமூகத்தாருடைய சடங்கு, பிரார்த்தனை, வழிபடு கடவுள்கள் முதலாகியவைகளுக்கும் சேர்த்து எல்லாவற்றிற்கும் ஒரே பெயராக இந்துமதம் அதாவது இந்தியர்களின் மதம் என்பதாக பெயரிட்டு விட்டார்கள்.

அக் காலத்தில் இருந்த திராவிடர்கள் பழக்க வழக்கங்களுக்கும் இந்து மதம் என்றும், ஆரியர்கள் பழக்க வழக்கங்களுக்கும் இந்து மதம் என்றும் மலைநாட்டு மக்கள் பழக்க வழக்கங்களுக்கும் இந்து மதம் என்றும், ஆரிய சமாஜமும் இந்து மதம் என்றும், பிரம்ம சமாஜமும் இந்துமதம் என்றும், வேதாந்தமும் இந்துமதம் என்றும், கடவுளையும் மதத்தையும் சரீரத்தையும் உயிரையும் துறந்த துறவறமும் இந்து மதம் என்றும், பவுத்தர்கள் பழக்க வழக்கங்களுக்கும் இந்து மதம் என்றும், நாஸ்திகர்கள் கொள்கைகளுக்கும் இந்து மதம் என்றும், இப்படிப் பலவிதமாய் அவர்கள் அதாவது கிறிஸ்தவர்கள் மகமதியர்கள் தவிர மற்ற எவர்களது நடவடிக்கைக்கும் இந்துமதம் என்றே பேர் வைத்து விட்டார்கள். அதாவது இந்தியர்களின் மதம் எனச்சொல்லி விட்டார்கள்.

ஆகவே இந்து மதம் என்றால் இந்தியர்கள் மதம் என்றுதான் அருத்தமே ஒழிய, ஒரு தனிப்பட்ட குறிப்பான கொள்கைகளுக்கு இந்து மதம் என்று பெயரில்லை. என்றாலும், அக்காலத்தில் ஆரியர்கள் சிறிது செல்வாக்குப் பெற்று இருந்ததால் அவர்கள் தங்கள் பழக்க வழக்கம், சடங்கு, தங்களின் வழிபடு கடவுள்கள் ஆகியவைகளையே பிற இந்தியர்கள் மீதும் சுமத்தி, அதற்கு அதிகமான செல்வாக்கை உண்டாக்கிவைத்துக் கொண்டிருந்தபடியால், ஆரியர்கள் பழக்க வழக்கம், சடங்கு, வழிபடு கடவுள், அவர்களது இலக்கிய ஆதாரங்கள், சாஸ்திரங்கள் புராணங்கள் என்பன முதலியவைகளே இந்துக்களின் மதமாகவும் மத ஆதாரங்களாகவும் ஆக்கப்பட்டுவிட்டன. ஆரியர்களுக்கு எதிர்ப்பானவைகளும் ஆரியர்கள் அல்லாதவர்களும்கூட விவகாரத்திற்கு இடமில்லாமல் போகட்டும் என்கின்ற காரியத்திற்காகவே, எல்லாம் இந்து மதம்தான் எல்லோரும் இந்துக்கள்தான் என்றும், அதுவும் இந்து மதம் இதுவும் இந்து மதம் என்றும், இந்து மதத்தில் எல்லாக் கொள்கையும் உண்டு என்றும், ஒரு இந்து எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம் என்றும், பல சமயங்கள் சேர்ந்தது இந்து மதம் என்றும், அவ்வப்போது தோன்றிய பல பெரியார்களின் அபிப்பிராயங்கள் எல்லாமுமே இந்து மதமாக இருக்கிறது என்றும், எந்த மதக்கருத்தும் இந்து மதத்தில் உண்டு என்றும், எப்படிப்பட்டவனும் இந்துவாய் இருக்கலாம் என்றும், புத்தர்கள், சமணர்கள், ஜெயினர்கள் எல்லாருடைய அபிப்பிராயமும் இந்து மதத்தில் இருந்து வந்ததுதான் என்றும், இந்து மதத்துக்கு பொருத்தமானதே என்றும் சொல்லிப் பொதுவாக இன்று முகமதியர்கள் கிறிஸ்தவர்கள் அல்லாத எவரும் இந்துக்கள் என்றே சொல்லக் கூடிய நிலையை ஏற்படுத்திக் கொண்டார்கள்.

இந்து மதம் என்பதாக, இந்துக்களுடைய பழய ஆதாரங்கள் என்று சொல்லும்படியான எதிலும் ஒரு வார்த்தை கூடக் கிடையாது.

இந்தியாவின் பெயரைக் குறிப்பதற்கு இந்துஸ்தான் என்று ஒரு வார்த்தை காணப்படலாமோ என்னமோ அதுகூடத் தைரியமாய்ச்சொல்வதற்கு இல்லை. இந்தியா என்கின்ற பெயர்கூட இந்துமத ஆதாரங்கள் என்பவைகளில் இருப்பதாகத் தெரியவில்லை.

இந்து மதம் என்பதற்கு என்னதான் அர்த்தம் என்று பழய அதாவது சுமார் 100 வருஷம், 200 வருஷம் முந்திய அய்ரோப்பிய அகராதிகளையும், அய்ரோப்பியக் கலைகளையும் பார்ப்போமானால், மகமதியர்கள் அல்லாதவர்கள் அனுஷ்டிக்கும் மதம் என்றும், ஆரியர்களின் பழக்க வழக்கங்களைப் பின்பற்றுகிறவர்களுக்குச் சொல்லும் மதப் பெயர் என்றும், ஆரியர்கள் அனுஷ்டிக்கும் ஆச்சார அனுஷ்டானங்கள் என்றும்தான் காணப்படுகின்றனவே அன்றி வேறு ஒன்றும் சொல்லப்படுவதாகக் காணமுடியவில்லை.

இந்து மதம் பிரத்தியட்சத்தில் என்னமாய் இருக்கிறது என்று பார்ப்போமானால் விக்கிரகங்களை வணங்குவது, ஜாதி வித்தியாசங்களை-உயர்வு தாழ்வுகளைப்பாராட்டுவது ஆகிய இந்த இரண்டு காரியம்தான். இந்த உலகத்தில் வேறு எந்தத் தேச மக்களிடத்திலும் வேறு எந்த மதஸ்தரிடத்திலும் இல்லாத குணங்கள் கொண்டு இருந்து வருகிறது.

இந்த இரண்டு காரியங்களைப் பற்றி அறிஞர்கள் என்பவர்கள் வெகு காலத்துக்கு முன்பே தவறுதலானது என்றும், அவசியமற்றது என்றும் முடிவு கட்டிவிட்டார்கள். அதற்கும் பல ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன் உள்ள பெரியார்கள் என்பவர்களுடைய வாக்கும் உபதேசமும் இருந்து வருகிறது. இவைகளையும் இந்துமத ஆதாரமாகவும், அப்பெரியார்களையும் இந்து மதத்தில் தெய்வீகாம்சம் பெற்றவர்கள் என்றும் சொல்லப்படுவதோடு, விக்கிர ஆராதனையில் நம்பிக்கை இல்லாதவனும் ஜாதி வித்தியாசம் உயர்வு தாழ்வு ஆகியவற்றை வெறுப்பவனும், இகழ்பவனும்கூட இந்துதான் என்றும், அதற்கும் ஆதாரம் இந்து மதத்தில் இருக்கிறது என்றும் சொல்லப்படுகிறது.

ஆகவே இப்போது எது இந்துமதம் அல்லாதது என்று சொல்ல முடியாத நிலையில் இருக்கிறோம்.

ஆனால் தேசியத் தலைவர்கள், மதத் தலைவர்கள் என்று சொல்லப்பட்டவர்களான தோழர்கள் காந்தியார், மாளவியா முதலாகியவர்கள் இந்து மதம் என்று எதைச் சொல்லுகிறார்கள் என்று பார்த்தால் வருணாச்சிரமத்தைப் பரிசுத்தமாக்கி நிலைநிறுத்துவதுதான் இந்து மதம் என்கின்றார் காந்தியார்; களிமண்ணும், கங்கை ஜலமும்கூடவே இருக்க வேண்டியதுதான் இந்து மதம் என்று செய்து காட்டுகிறார் மாளவியா.

மகமதிய ஆதிக்கம் தலையெடுக்காமல் செய்வதுதான் இந்து மதம் என்கிறார் மூஞ்சேயாரும் பரமானந்தனாரும். மற்றபடி சங்கராச்சாரிகளுடைய இந்து மதம் எப்படிப்பட்டது? இராமானுஜாச்சாரியாருடைய இந்து மதம் எப்படிப்பட்டது? பண்டாரச் சன்னதிகளுடைய இந்து மதம் எப்படிப்பட்டது? மனுதர்ம சாஸ்திர இந்து மதம் எப்படிப்பட்டது? இதிகாசமாகிய கீதையுடைய இந்து மதம் எப்படிப்பட்டது? புராணங்களுடைய இந்து மதம் எப்படிப்பட்டது? சைவர்களுடைய இந்து மதம் எப்படிப்பட்டது? மற்றும் பார்ப்பனரல்லாத சைவர்கள் இந்து மதம் எப்படிப்பட்டது? வைணவர்களுடைய இந்து மதம் எப்படிப்பட்டது? என்பவைகளைப் பற்றி நாம் விவரிக்க இதில் இடம் வைத்துக்கொள்ளவில்லை.

எப்படி இருந்தாலும் இஸ்லாமியர்களைப் போலவும், கிறிஸ்துவர்களைப் போலவும் மதம் என்பதற்கு இருந்து வரும் ஆதாரம், கொள்கை, குறிப்பிட்டவர்களுடைய உபதேசம் என்பதாக எதுவும் இல்லாமல், வார்த்தை அளவில் குருட்டு அபிமான அளவில்

[தொடர்ச்சி 16ம் பக்கம்]

# திராவிடக் குடி அரசுக்காகப் போராடுவோம்.

★

1—7—48ம் தேதி நாம் திராவிடநாடு பிரிவினை நாள் கொண்டாட வேண்டிய தினம். சென்ற ஆண்டு ஜுலை மாதம் முதல் தேதியைப் பிரிவினை நாளாகக் கொண்டாடினோம். இந்த ஆண்டும் கொண்டாடுவோம். நமது இலட்சியக் கோரிக்கை நிறைவேறும்வரை ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடுவோம்.

### திராவிடத்தின் நிலை.

“திராவிடநாடு திராவிடருக்கே” என்பது திர்ாவிட மக்களின் இதய கீதமாக இன்று ஒலித்துக் கொண்டிருக்கிறது. இந்த லட்சியம் வெற்றி பெற—திராவிடக் குடியரசை அமைக்கவேண்டும் என்ற ஆர்வம் லட்சக்கணக்கான மக்களின் உள்ளத்தில் ஒப்பற்றஇடம் பெற்றிருக்கிறது. “திராவிடநாடு எங்கள் பிறப்புரிமை” என்ற உரிமைப் புயல், நாட்டின் எட்டுத் திக்குகளிலும் வீசிக்கொண்டிருக்கிறது. “அடைந்தே தீருவோம் திராவிடத்தை” என்ற ஆர்வத்தின் ஒலி அலையின் சங்கநாதம் இன்று போர் முரசாக மாறிக்கொண்டிருக்கிறது. அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறவேண்டும் என்ற ஆர்வத்தினால், குமுறிக் கொண்டிருக்கும் திராவிட மக்களின் உள்ளங்கள் வெடித்து அனல் பிழம்புகளை வீசும் எரிமலையாக மாறிக் கொண்டிருக்கிறது. மாற்றானின் ஆட்சியில் மண்டியிட்டு வாழவிரும்பாத திராவிடர்களின் மனம் கொந்தளித்துக் குமுறி எழும் கடற்கோலாக மாறிக்கொண்டிருக்கிறது. இந்த நிலை நீடிக்குமானால் விளைவு விபரீதமாக மாறிவிடும் என்பதை ஆளவந்தார்களுக்குஅறிவிக்கிறோம். இந்த நிலை மாறியாகவேண்டும். அதாவது, திராவிடம் தனி நாடாகப் பிரித்துவிட்டுவிட வேண்டும்.

உலகத்தில் “மானிடம் என்னுமோர் ஆதிப்பயிர் தமிழ் மக்கள்” என்ற புரட்சிக்கவிஞரின் கூற்றினுக்கொப்ப, முன்தோன்றி மூத்த குடி மக்களாகப் பிறந்து, ஒப்பற்ற கலை, நாகரீகம், இலக்கியம் முதலிய சிறந்த பண்புகளுடன் விளங்கி, அரசு பல அமைத்து, வடநாடு சென்று ஆரிய வேந்தனை வென்று, இமயத்தில் கொடிநாட்டி உலகெங்கும் புகழ்பரப்பி ஒப்பற்று வாழ்ந்திருந்தோம். முத்தையும், பவளத்தையும், வாசனைப் பொருள்களையும், அழகிய ஆடைகளையும் வெளிநாடுகளுக்குக் கொண்டு சென்று வாணிபம் செய்து வான்புகழ் கொண்டு வாழ்ந்திருந்தனர் திராவிடர்கள் முன்நாளில். கதையல்ல, வரலாறு, சிந்திக்கும் திறன் பெற்றிருப்பவருக்கு மட்டும்தான்.

ஆனால் ஆரியம் இந்நாட்டில் அடியெடுத்து வைத்தபின், அதனுடைய கீழ்த்தரமான பழக்க வழக்கங்களையும், மதக்கோட்பாடுகளையும் பின்பற்றிய காரணத்தால் காலப்போக்கில் கருத்திழந்து, அரசியல், சமூக, பொருளாதாரத் துறைகளில் பிறநாட்டவர்களுக்கும், மதத்தினருக்கும் அடிமையாகி அஞ்சி ஒடுங்கி அவலைகளாகப் பிறந்தநாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அன்று நாம் வாழ்ந்திருந்த நிலையினையும், இன்று வாழ்கின்ற நிலையினையும் ஒப்பிட்டுப் பார்க்கும் எந்தச் சாதாரண மனிதனுடைய உள்ளத்திலும் விவரிக்க முடியாத ஒரு வேதனையுணர்ச்சி உண்டாகித்தான் தீரும். இந்த நிலையை எண்ணிப்பார்த்து இதை மாற்றி அமைக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்ட சிந்தனைச் சிற்பி பெரியாரின் உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து எழுந்த பெருமூச்சின் ஒலிஅலைதான் “திராவிட நாடு திராவிடருக்கே” என்ற முழக்கம். இது இன்று நாலரைக்கோடி மக்களின் உயிர்ப்பு—வாழ்க்கை லட்சியம்.

### பிரிவினை நாள்.

சென்ற ஆண்டு ஜூலை மாதம் முதல் தேதியைத் திராவிடநாடுப் பிரிவினை நாளாகக் கொண்டாடினோம். கொண்டாடினோம் என்றால் ஆட்சிப் பீடத்திற்கு அறிவித்தோம் என்றுதான் பொருள், இந்த ஆண்டு 1—7—48ம் தேதியைத்திராவிடநாடு பிரிவினை நாளாகக் கொண்டாடி “வீழ்ச்சியுற்றுக் கிடந்த திராவிட சமுதாயம் வீறுகொண்டு எழுந்துவிட்டது. எழுச்சியுற்ற திராவிட மக்கள் உரிமைப் போராட்டத்தின் கொடியை உயர்த்தி விட்டார்கள்! நாடாளும் உரிமையை மாற்றானிடம் விட்டதனால் நலிந்து கிடக்கும் மக்கள் நாடாளும் உரிமையை மீண்டும் பெற்று நல்வாழ்வு வாழவேண்டும் என்று உறுதி கொண்டுவிட்டனர்! இதற்காக உயிரையும் பணயம் வைக்கத் தயங்கமாட்டார்கள்! இந்த உரிமைப் புரட்சியை இனி எவராலும் அடக்கி ஒடுக்கிவிட முடியாது” என்ற உண்மை நிலையை ஆட்சிப்பீடத்தில்அதிகாரமிருக்கிறது என்ற மமதையுடன் கொலு வீற்றிருக்கும் ஆளவந்த அமைச்சர்களுக்கு அறிவிப்போம். “கொள்கையொன்றினையெதிர்த்துச் சட்டமோ உத்தரவோ பிறப்பிப்பதன் மூலம் அக்கொள்கை பரவுவதை யாரும் தடுத்துவிட முடியாது” என்று அமெரிக்கத் தலைவர் ட்ரூமன் கூறியதை அமைச்சர்களுக்கு ஞாபகப்படுத்துகிறோம். இது சாதாரண வார்த்தையல்ல. அவர் அனுபவத்தில் அறிந்த உண்மை இது.

சென்ற ஆண்டு நாம் பிரிவினை நாள் கொண்டாடியதற்கும், இந்த ஆண்டு கொண்டாடப் போவதற்கும் இடையில் ஓர்ஆண்டு சென்றுவிட்டது. சென்ற ஆண்டில் வரலாற்றில் இடம்பெற வேண்டிய பல செயல்களைச் செய்திருக்கிறோம். நாடு வெள்ளையனிடமிருந்து விடுதலை பெற்றுவிட்டது என்று கூறப்பட்டுச் சுதந்தர தினம் கொண்டாடிய பொழுது, அந்நாள் திராவிடர்களின் விடுதலை நாள் அல்ல, வெள்ளை ஆட்சி மாறி பார்ப்பன—பனியா ஆட்சி ஏற்படும் நாள் என்பதை விளக்கிக் கூறி, திராவிடத்தின் துக்கநாளாக கொண்டாடினோம். 8, 9-5-48ல் தூத்துக்குடியில் ஒன்றரை லட்சம் திராவிட மக்கள் ஒன்று கூடி “திராவிட நாட்டைத் தனி சுதந்தர நாடாக்குவதே திராவிட மக்களின் முடிவான அரசியல் கோரிக்கை” என்றும், அரசியல் நிர்ணய சபை என்று கூறிக்கொண்டு காங்கரஸ்காரர்களால் பொறுக்கி எடுக்கப்பட்ட பார்ப்பன—பனியாக் கூட்டத்தினர்களைக் கொண்டு ஜன

(தொடர்ச்சி 13-ம் பக்கம்)

கதை கற்பனை.

சிறுகதை

முதற்பருவம்.

# கைதியின் கதை.

போட்டி

எண் 2.

சாமா சாஸ்திரிக்கும், சங்கரலிங்க அய்யருக்கும் சபாபதி முதலியாரின் கோவில் திருப்பணியையும், பின் அவர் செய்யும் தான தரும விசேடங்களையும் பற்றிப் பேச்சு நடந்து கொண்டிருந்த அதே நேரத்தில் சித்திவினாயகர் கோயில் மணி கணீர்! கணீர்! என்று ஒலித்துக்கொண்டிருந்தது. ஆண்டவனின் அடியார்கள் அன்றைக்குத் திரள் திரளாகக் கோயில் மேல் 'படை எடுத்தனர். கோயிலில் இந்த மாதிரி 'விசேஷ தினங்களில்' 'ஜனத்'திரளுக்குச் சொல்ல வேண்டுமா?

அலை மோதும் பக்தர் வெள்ளத்தின் நடுவில் பட்டுக்கரை வேட்டியும், கட்டுக்கட்டாக நீறும் அணிந்து உருத்திராட்சமும், ஓங்கார உச்சரிப்புமாகக் காட்சியளித்தார் சபாபதி முதலியார்.

அவர் கண்களில் நீர் துளித்தது. ஆம் 'ஆநந்த பாஷ்பம்'. அடங்கி அமைதியாய் இருந்த கடல் திடீரென்று ஆர்த்து அலைப்பது போல பக்தர் வெள்ளத்திலே ஓர் சலசலப்பு. எல்லா வாய்களும் 'கணபதி, மகாகணபதி' என்று முணுமுணுத்தன. எல்லாக் கைகளும் கூப்பியவாறே தலைக்கு மேல் மட்டத்திற்கு வந்தன. எல்லோரும் குதிக்காலை உயர்த்தி நின்றனர். அதே நேரத்தில் குருக்கள் தீப ஆராதனை செய்துகொண்டிருந்தார்.

அதேநேரத்தில் 'என் குடி கெடுத்த கோட்டானே உன் கோவில்மேல் இடிவிழ' என்று சபித்துக் கொண்டிருந்தாள் அஞ்சலை. அவள் குரலை 'இருட்டடைப்பு' செய்வது போன்று சித்தி வினாயகர் கோவில் மணி பன்முறை ஒலித்தது. பல்லியின் வாயிலே அகப்பட்டு மறையும் ஈப்போல அஞ்சலையின் சாபமும் அழிந்தது. ஆனால் அவள் 'இதயத் துடிப்புகள்' மட்டும் மடியவில்லை. எப்படி மடியும்!

*　　*

தளும்பும் தண்ணீர்க் குடத்தை இடுப்பிலே இடுக்கிக் கொண்டு ஒய்யாரமாக நடந்து செல்வாள் அஞ்சலை. இது மாமூல். கட்டமைந்த தேகம். கருப்பான மேனி. கூர்மையான மீசை. காளைப் பருவம். அவன் தான் காளியண்ணன். கூடையிலே இளநீரை நிரப்பிக் கொண்டு அரிவாள் ஒன்றை அதிலே சொருகிவிட்டு அஞ்சலை செல்லும் பாதையிலே அவன் அமர்ந்திருப்பான்.

முதலிலெல்லாம் அஞ்சலையின் குடத்தில் உள்ள நீர்தான் தளும்பிக் கொண்டிருந்தது. ஆனால் காளியப்பனைக் கண்ட நாளிலிருந்து அவள் இதயம்கூட தளும்ப ஆரம்பித்தது. கண்ணும் கண்ணும் இணைந்தன. கருத்தும் கருத்தும் இணைந்தன.

காளியண்ணன் தொலைவில் இருக்கும்போதே அஞ்சலையின் அதரத்தில் ஓர் புன்னகை அரும்பும். அடுத்தநிமிஷமே காளியண்ணனின் அரிவாள் இளநீர்க்காயின் தலையைச் சீவித்தள்ளும். பின்பு அஞ்சலை அதை வாங்கிக் குடிப்பாள். தேங்காய் நீரை மாத்திரமா? இல்லை. காளியண்ணனின் இருதயத்தையும் கூடத்தான்.

இதில் காளியண்ணனுக்கு ஓர் தனியானந்தம்!

பறவைகள் இரண்டும் தப்பிப் பறந்தோடின, கூண்டை விட்டு மாந்தோப்பிற்கு.

*　　*

"எசமான் நீங்க காலால் இட்ட வேலையை நான் தலையால் செய்யறேனுங்க,என் தோலை உங்களுக்குச் செருப்பாகத் தைத்துப் போடறேனுங்க" என்ற சகஜமான பேச்சோடு களியண்ணன் சபாபதி முதலியார் வீட்டு வேலைக்கமர்ந்தான். தோளெள்ளாம் ஓய, நாளெல்லாம் உழைத்தான். அரையிலே அரை ஆடை. குடிப்பது குறை கூழ்! இப்படித்தான் அவன் தன் வாழ்க்கையை நடத்தினான்.

இயந்திரம் போன்று உழைத்தான் அவன். முதலியார் அவனைத் தட்டிக்கொடுக்கும் பணியிலே பேசினார். அதில் என்ன ஆச்சயரிம் இருக்கிறது?

முதலியாரின் மாளிகைக்குப் பக்கத்திலே தான் காளியண்ணன் வசித்தான். இருண்ட வீடு. சரிந்த கூரை—இதுதான் அவன் இல்லம்.

எது எப்படி இருப்பினும் காளியண்ணனும், அஞ்சலையும் 'இன்ப வாழ்வு' நடத்தினர். இருள் நிறைந்த வானில் தானே சந்திரன் பவனி வருகிறது. அது போலத் தான் அஞ்சலைக்கு ஆறுமுகம் பிறந்தான்.

ஆறுமுகத்தின் சிந்தனையைக் கிளறும் கேள்விகள் காளியண்ணனின் அறிவிலேயே ஓர் புதிய அத்தியாயத்தை ஆரம்பித்து வைத்தன. 'வெளுத்த தெல்லாம் பால்' என்றிருந்த காளியண்ணனுக்கு ஆறுமுகத்தின் கேள்விகள் மூலாமை நீக்கி, பித்தளைகளை எடுத்துக்காட்டின. 'மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றுவான்' என்று பேசிய காளியண்ணன் மகனின் மேல் படிப்பைப் பற்றிப் பேசும் அளவுக்கு முன்னேறினான். "ஏன்?, எப்படி?, எதற்கு?" என்று ஆறுமுகம்

[தொடர்ச்சி 10ம் பக்கம்]

## கவனிக்க!

## சிறுகதை போட்டி

★

குடிஅரசின் 4கலத்திற்கு[4பத்திக்கு]மேற்பட்டதாய்க் கதைஇருத்தல்கூடாது என்ற நிபந்தனையைக் கதை எழுதுவோர் கவனிக்க வேண்டும். அர்த்தமற்ற, காதலை அடிப்படையாக வைத்துப் பின்னப்படும் கதைகள் வெறும் ஆபாசக் களஞ்சியமாகவே முடிகின்றது என்பதையும் எழுதுவோர் கவனிக்க வேண்டும்.

ஆசிரியர், "குடிஅரசு"

# கூட்டுறவு ஸ்தாபனத்தை அடியோடு மாற்றுக!

## மக்கள் சர்க்காரின் முதல் கடமை.

★

கூட்டுறவு (கோவாபரேடிவ்) ஸ்தாபனத்தின் பேரால் நாட்டில் பல பாங்குகளும், ஸ்டோர்களும், சேல்ஸ் சொஸைட்டிகளும் இன்னும் இதுபோன்ற பல காரியங்களுக்காக சொசைட்டிகள் நிறுவி ஓரளவு வேலைசெய்து வருகின்றன என்றபோதிலும், கூட்டுறவு ஸ்தாபனம் என்னநோக்கத்தோடு, யாருடைய நன்மைக்காக ஏற்படுத்தப்பட்டனவோ அவைகளுக்குப் பயன்தரும் முறையில் இல்லை என்பதை எந்தக் கூட்டுறவு ஸ்தாபனத்தை உதாரணமாக எடுத்துக் கொண்டு பார்த்தாலும் நன்கு விளங்கும்.

இதிலிருந்தே ஏதோ அந்த ஸ்தாபனத்தின் அமைப்பு முறையிலேயே கோளாறு இருக்கிறது என்பதைச் சுலபமாகப் புரிந்து கொள்ளலாம் அல்லவா? நமது பெரியார் அவர்கள் பல தடவை குறிப்பிட்டு வந்திருப்பது போல், உண்மையில் கூட்டுறவு ஸ்தாபனங்கள் அனைவருக்கும் பயன் அளிக்கும் முறையில் நடைபெறவேண்டுமானால், அதன் நிர்வாகப் பொறுப்புக்கு சர்க்காரே நேரடியான பொறுப்பாளியாக இருக்கவேண்டும். இப்போது அவ்வாறில்லாமல் எல்லாப் பொறுப்புக்களையும் ஜெனரல்பாடிக்கு அதாவது அந்த ஸ்தாபனத்தின் பங்குதாரர்களுக்கு விட்டு — அவர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற டைரெக்டர்களின் பொறுப்பில் சகல அதிகாரங்களையும் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. டைரெக்டர்கள் பார்த்து இஷ்டப்பட்டால் தான் பங்குதாரர்களை சேர்த்துக் கொள்ள முடியும். அவர்கள் பார்த்து எவ்விதக் காரணமும் கூறாமலேயே ஒருவரைப்பங்குதாரராகச் சேர்த்துக்கொள்ள முடியாது என்று சொல்லிவிட அதிகாரம் உண்டு. இம்மாதிரி இருப்பதினால்தான் எந்தக் கூட்டுறவு ஸ்தாபனமும் மாமாங்கக் கணக்கில் சில குறிப்பிட்டவர்கள் கையிலேயே சிக்கிக்கொண்டு அவர்களைச் சேர்ந்தவர்கள் என்பவர்களல்லாத வேறு யாருக்கும் உள்ளே நுழையக்கூட மார்க்கம் இல்லாமல் இருந்து வருகின்றது. ஒரு சமயம் ஏற்கனவே இருக்கும் நிர்வாகஸ்தர்களுக் குள்ளாகவே இரண்டு பட்டால் மட்டுமே தேர்தல் போட்டி பலமாக நடப்பதும், அது சமயம் மைனாரிட்டிக் கட்சியார் அதிகாரத்தில் இருக்கிறவர்கள் மீது பலப்பல குறைகள் கூறுவதும், முடிவில் அவர்கள் கூப்பாட்டுக்கு எவ்வித அர்த்தமுமில்லாமல் போவதும் நடைமுறையில் கண்டு வரும் காட்சிகளாகும்.

இனிமேல் நாட்டில் அநேகம் காரியங்கள் கூட்டுறவு முறையில் நடத்த வேண்டியிருப்பதால்தான், அம்மாதிரி காரியங்களைத் துவக்குவதற்குமுன் சர்க்கார் கூட்டுறவு ஸ்தாபனத்தின் அமைப்பு முறையை மாற்றியாகவேண்டும் என்பதற்காகவே இவைகளையெல்லாம் இது சமயம் இவ்வளவுதூரம் விவரித்துக்கூறவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

இப்போது இருந்துவரும் கூட்டுறவு இலாகா இதுவரையிலும் ஒரு கண்காணிப்பு இலாகாவாக மட்டுமே இருந்துவருகிறது. இனிமேல் அம்மாதிரியில்லாமல் கூட்டுறவு இலாக்கா என்பது, இந்த மாகாணத்திலுள்ள எல்லா கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கும் பொறுப்பு வாய்ந்த தலைமை நிலையமாக இருக்கவேண்டும். கூட்டுறவு ஸ்தாபனத்தில் இஷ்டப்பட்டால் சேரலாம் என்பதைக்கூட எடுத்துவிட்டு, கட்டாயமாக நாட்டு மக்கள் அனைவரும் கூட்டுறவு ஸ்தாபனத்தில் பங்குதாரர்களாகும்படி திட்டம் வகுக்கப்படவேண்டும். கூட்டுறவு ஸ்தாபனத்தின் சார்பாக நடைபெறும் சகல காரியங்களுக்கும் பந்தோபஸ்து அளிக்கும் முறையில் தனிப்பட்டவர்களின் வியாபாரம், லேவாதேவிகளுக்குத் தடை விதிக்கப்படவேண்டும்.

உதாரணமாக, ஒரு ஊரில் கோவாபரேடிவ் பாங்க் இருப்பதாக வைத்துக்கொண்டால், அந்த ஊரில் வேறு எந்த தனிப்பட்ட நபரும் சர்க்கார் லைசென்ஸ் பெறாமல் பாங்குகள் வைத்து நடத்தக் கூடாது என்று தடை விதிக்கப்பட வேண்டும். அவ்வாறு செய்யப்படுமானால் பணம் படைத்த பிரமுகர்கள் தங்கள் பணத்தை கோவாபரேடிவ் பாங்குகளில் குறைந்த வட்டிக்கு டிபாசிட் செய்வதைத் தவிர வேறு வழி இருக்க முடியாது. அதே நேரத்தில் நியாயமான காரியங்களுக்குப் பொதுமக்கள் அவசியமான தொகையை ஷை பாங்குகளில் வெகு சுலபமாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

இம்மாதிரி ஏற்பாடு செய்யாமலிருப்பதினால்தான், அநேகம்பேர் ஊதாரித்தனத்துக் கெல்லாம் என்ன வட்டியானாலும் சரி என்று கடன் வாங்க முற்படுவதும், அப்பேர்ப்பட்ட பேர்வழிகளுக்காகப் பார்த்து வலிய வலியக் கடன் கொடுப்பதும், பிறகு அவன் சொத்தையே எப்பம்போட லேவாதேவிக்காரன் எண்ணி சிவில் வியாஜ்ஜியம் தொடுப்பதும், சிவில் விவகாரம் முற்றி கிரிமினலில் கொண்டு போய் விடுவதும், கடைசியாக சொத்து பூராவும்போய் ஆள் தப்பினால் போதும் என்ற நிலையை அடைவதுமான பல நிகழ்ச்சிகள் அன்றாடம் நடந்த வண்ணமாகவே இருக்கின்றன.

கடைசியாக சர்க்காரைக் கேட்டுக் கொள்வதெல்லாம், உண்மையில் நீங்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்களுக்காக ஆட்சி செய்யும் மக்கள் சர்க்கார் என்று கருதுவீர்களேயானால் மக்களின் வாழ்க்கை பாழாவதற்கான தனிப்பட்ட லேவாதேவிகளையும், வியாபாரங்களையும் ஒழிக்கும் முறையில் கூட்டுறவு ஸ்தாபனத்தின் அமைப்பை அடியோடு மாற்றியமைக்க முன்வர வேண்டுகிறேன்.

ஆனால் எனக்கு இருக்கிற ஒரே ஒரு பயம், இந்தக்காரியத்தைச் செய்ய நாட்டிலுள்ள வக்கீல்கள் சம்மதிக்கமாட்டார்கள் என்பது மட்டுமல்ல-என்னென்ன எதிர்ப்புகள் செய்யவேண்டுமோ அத்தனையும் செய்வார்கள் என்றுகூட அஞ்சுகிறேன். ஏன்? கூட்டுறவு இயக்கம் நல்ல முறையில் நடந்து விட்டால் நாட்டில் விவகாரத்துக்கே அநேகமாக இடமில்லாமல் போய்விடும். பிறகு வக்கீல்கள் யாருக்கு வக்காலத்துப்

# ★ ஏ ஆரியமே! ★

அன்றொரு நாள் நம் திராவிடன் வீர தீர பராக்கிரமசாலியாய் இருந்தான். ஈழம் வென்றான். இமயத்தில் வில், புலி, கயல் பொறித்தான். ரோம் நாட்டவர்களுக்கு ஆடை, அணி அனுப்பிப்புகழ் பெற்றான். மரக்கலங்களின் பேருதவியால் அலை கடல் கடந்து வாணிப அரசனாய்க் கீர்த்தியுடன் திகழ்ந்தான். இன்னும், பண்பு, கலை, நாகரிகம் எல்லாவற்றிலும் ஒப்பற்றவனாய் திகழ்ந்தான். சரித்திரத்தில் அழியாப்புகழை அடைந்தான். அசோகன், அக்பர்—இத்தரணியைத் தன் ஒரு குடைக்கீழ் ஆண்ட போதுங்கூட திராவிடன் தனித்து நின்று தனியரசு நடாத்தினான். 'எல்லோரும் ஒன்று; ஒருவனே தேவன்'—என்ற சீரிய கொள்கையுடையவன். தன் தோள் வலியால் வாள் ஏந்தி வெண் சமர்புரியும் பண்புடையோன். கோழையல்ல-வீரன். மறத்தமிழன். பாகை நிமிர்த்தி வாகை சூடிடும் பண்பினன். அன்பின் எல்லையைக் கண்டவன். உயிரினும் மானமே பெரிது என்று மதிக்கும் நோக்குடையோன்.

இவனை!.........

ஏ ஆரியமே! நீ செய்த வேலை தான் என்ன! நீ இந்த நாட்டிற்கு வந்து இந்த நாட்டிற்குச் செய்த இன்னல்களை, இடுக்கண்களை எடுத்தியம்ப இந்தப் பேனாவால்தான் முடியுமா! அப்படி எழுதினாலும் உன் அடிவருடும் எங்கள் திராவிட இனத்தவர்கள் உனது போதையால் 'இது சூனா மானா பேனா; இதை நம்பாதே' என்று திரைமறைவில் ஏவிடும் உங்கள் ஆணவத்திற்கு ஆளாகி எங்களையே இம்சிப்பர், பகுத்தறிவுக் கண்ணை நீ அவித்து விட்டபடியால். இந்த நாட்டிற்கு வந்து, நீ ஹர்ஷரைக் கொல்ல முயற்சித்தாய்! அக்பர் ஆட்சியை வீழ்த்தினாய்! தஞ்சை நாயக்கன் ஆண்ட தரணியைத் தவிடுபொடியாக்கினாய்! முகலாய சாம்ராச்சியத்தை முறியடித்தாய்! நவ நந்தர்களை நாசமாக்கினாய்! சித்தூர்க் கோட்டையின் முற்றுகை—உதயசிங்கின் ஓட்டம்—ஜெயபாலின் வீரம்—இராஜபுதன மாந்தர்களின் வீரதீரம்—இவைகளைக் கண்டு

இரத்தக் கண்ணீர் வடிக்கவேண்டிய நீவீர் புன்னகை, இன்னகை புரிந்தீர்! ஆம். உளம் பூரித்தீர்! இது மட்டுமோ!

எங்களது திராவிட வீரதீரத்தை மடமைத் திரையிட்டு மறைக்க, புராண இதிகாசங்கள், சாஸ்திர, ஸ்மிருதிகளை ஏவினீர். பல கடவுட் தன்மைகளைப் போற்றும் சக்தி கொடுத்தீர். பக்தியால் முக்திபெற வழி வகுத்தீர். கயமைத் தன்மைகளைப் போதிக்கும் கடவுள்களை ஏவி எங்கள் பகுத்தறிவைப் போக்கினீர். நெற்றியில் 'எக்ஸ்ட்ரா' கண்ணையுடைய பாம்பணிந்த சிவனையும், அவனது மகன் மயில் வாகனத்தையுடைய ஆறுமுகத்தையும், யானைத் தலைவன், பானை வயிறன், பெருச்சாளி வாகனன் பிள்ளையாரையும் எங்களுக்குப் போதித்து மதப்பித்துக் கொண்டு அலையச்செய்தீர். புராணங்களில் நீவீர் நந்தனைப் படுத்திய பாடு, பக்தனிடம் பிள்ளைக்கறி கேட்ட செய்கை, ஓட்டை மறைத்துப் பக்தனின் கேட்டை வெளிப்படுத்திய செய்கை அவ்வளவும் கொடூரம்! உங்கள் இனத்தவருக்கு நினைத்த அளவிலே முக்திகொடுத்தீர் புராணங்களில்! ஆம். நீவீர் செய்த வேலைகளை மானமுள்ள திராவிடன் சகிப்பனோ?

இன்னும்!!

என்றென்றைக்கும் திராவிடர்களை மடமையினால், சட்டத்தினால் கட்டுப்படுத்திவிட்டீர். சட்டம் உங்களுடையது. நீவீர் செய்த குற்றங்களுக்குத் தண்டனை இல்லை. ஏன்? உயர் குடிப்பிறந்த உத்தம ஆண்மாக்கள் (?) அல்லவா நீவீர்! செத்த மனிதரிடம் இங்கிருந்து தூது செல்லும் பரம்பரையினரல்லாவா நீவீர்! ஏ, ஆரியமே! போதும் உன் ஆணவம். அகந்தை.

உன்னை எதிர்த்த மன்னாதி மன்னர்களை மண்ணாக்கினாய். உன்னை எதிர்த்த பெரியோர்கள் எல்லாம் முடிவிலொரு பிடி சாம்பலாயினர் ஆரிய ஆணவ போதையாலே. 'மனுஸ்மிருதி'—அகழியையுடைய 'இந்து' மதக் கோட்டைக்குள்ளே நீ ஒளிந்து கொண்டு உன் படைகளாம் மடமை, பழமை, வைதீகம், வர்ணாஸ்ரமம், சனாதனம் இவைகளை ஏவித் திராவிட வாழ்வை வீழவைக்கின்றாய். அண்மையில் இந்து மத வெறியாலே காந்தியார் உயிர் பலியாயிற்று உன் இனக் கோட்சேயால். உனக்குப் பாதுகாப்பு சட்டமும், வேதமும், புராணமும்.

இப்பேர்ப்பட்ட ஆரிய ஆணவத்தை வீழ்த்தப் புறப்பட்டார் நம் அண்ணல், வைக்கம் வீரர், பெரியார் ஈ. வே. ரா. 'பட்டம் பதவி வேண்டாம் எனக்கு' என்பவர். 'சர்' பட்டம் பெற்றவரல்லர். அமெரிக்காவுக்கோ, ஜினிவாவுக்கோ சர்க்கார் (!) செலவில் சென்றாரில்லை. இவைகளைத் துச்சம் என்று மதிக்கும் பண்புடையோர். 'ஏ' ஆரியமே! உன்வேலை, லீலை வேண்டாம் எங்கட்கு. எங்கள் இனத்தை வாழவிடு. இங்கு வாழ்கின்றார் முப்பத்துமுக்கோடி மாந்தரென்றால் சூழ்கின்ற பேதமும் அந்தத் தொகையிருக்கும் என்ற நிலையைத் தடுக்க, உயர்ந்தோன் உழைக்கலாகாது என்னும் நியதியைத் தகர்க்க, 'தொடாதே', 'எட்டி நில்' என்ற பேதைமையை வளர்க்கும் வர்ணாஸ்ரம முறையை வேருடன் களைய—திராவிட இனஅரசு அமைப்பதே தம்கடமை! என்றார். இவரது சீரிய கொள்கை பண்டைப் பெருமைகளை இழந்த இந்நாட்டுத் திராவிடப் பெருங்குடி மக்கட்கு வீரஉரை, தேன், தென்றல், நற் கருப்பஞ்சாறுங்கூட. அவரது வீர உரைக்குப் பணிந்து இன்றைக்கு எண்ணற்ற திராவிட இனக் காளைகள் 'அடைந்தால் திராவிடம்; இல்லை இடுகாடு' என்று சூழ் உரைத்துக் கருஞ்சட்டையணிந்து திக்கெட்டும் பரவுகின்றனர். ஆம். இது நல்ல அறிகுறியே. ஆரிய ஆணவம் அழியட்டும். மமதையாளர்கள் மடங்கட்டும்.—இதற்குச்சரியான முறையே கருஞ்சட்டை அணிதல். 'இதை அணிவோர் தொகை நாளுக்கு நாள் பெருகுவதைப் பாராய்!' என்று பயப்படும் தேசியத் தோழனே, நீ தூத்துக்குடி மாநாட்டை நோக்கு. யாங்கணும் கருப்பு மயம் ஜெகத்!...........
ஏ, ஆரியமே!! மக்கள் விழிப்பு உன் கண்களுக்கும் தெரியத்தான் தெரியும். இல்லை என்றால் நீ கூட்டுவாயா சென்னையில் மே மீ 1, 2 தேதிகளில் பார்ப்பன முன்னேற்ற மாநாட்டை! 'புல் ஏந்தும் கையில் வாள் எடுப்போம்'— என்று ஆணவம் பேசினாய். அகந்தைப் பட்டாய். பார். உன் கை வரிசையை. ஏ, ஆரியமே! இனிச் செல்லாது உன் புரட்டு, பித்தலாட்டமெல்லாம். புல் ஏந்தும் கையுடைய நீ வாள் எடுத்தால் செங்கோல் ஏந்திய எங்கள் கரம் சும்மா இருக்குமோ!! பார் உன் திறத்தை. இதுவே உன் கடைசி முஸ்தீப்பாக இருக்கட்டும். அதற்கு ஏ, ஆரியமே! நன்றாக முஸ்தீப்புச் செய்து இறங்கி வா. வா, வா இங்கே! எங்கே? பகுத்தறிவுக் களத்துக்கு! நேருக்கு நேராக!!

பாகை நிமிர்த்தி வாகை சூடுவோம்.

வாழ்க திராவிடம்!

"சி. சங்கரலிங்கம்"

---

பேசுவது! அந்தக் கவலை தான் அவர்களுக்கு. நல்ல வேளையாக நமது பிரதம மந்திரி அவர்கள் வக்கில் அல்ல. எங்கே பார்ப்போம்! என்ன செய்யப் போகிறார்? என்பதை.

"ஒரு ஈரோடு வாசி"

# குடி அரசு

19—6—48 சனிக்கிழமை.


## பெரியார்.

ஈரோடு 17.

இன்று சென்னையிலிருந்து இங்கு வந்த பெரியாரவர்கள் இன்று மாலையே குற்றாலத்துக்குப் புறப்பட்டு விட்டார்கள். அங்கு சில நாட்கள் தங்கியிருந்து,

23—6—48 சேலம் [திருமணம்]
24—6—48 திருச்சி [நிர்வாகக் கமிட்டி]

அலுவல்களை முடித்துக் கொண்டு மீண்டும் குற்றாலம் சென்று

3—7—48 செங்கம் [தாலூகா மாநாடு]
4—7—48 கோவை [கட்டடத் திறப்பு]க்கு

வந்து போவார்கள். பின் துறையூர் திருமணம் ஒன்றுக்கு வந்து கலந்து திரும்பவும் குற்றாலம் செல்லுவார்கள்.

## "விடுதலை"க்கு ஜாமீன்!

"விடுதலை" துவக்கிப் பத்து ஆண்டுகள் ஆயிற்று. விடுதலைப் பத்திரிகை பத்து ஆண்டுகளுக்கு முன், திராவிடர் கழகம் ஜஸ்டிஸ் கட்சி என்ற பெயரால் இருந்த போது, தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சி தோல்வியடைந்தவுடனே பெரியாரவர்களால் ஈரோட்டில் தினசரியாக 1937 ஜூலையில் துவக்கப் பட்டது. இந்தி எதிர்ப்பின்போது விடுதலை, தினசரிப் பத்திரிகையாக மக்களுக்குச் செய்த தொண்டை யாவரும் அறிந்ததேயாகும். அதன்பின் விடுதலை சென்னைக்கு மாற்றப்பட்டது. அங்கு 2, 3 ஆண்டுகள் நடந்தபின் யுத்தவெற்றிப்பிரச்சாரத்திற்காக 2 ஆண்டு அரசாங்கத்தாருக்குக் கொடுக்கப்பட்டது. பிறகு சுமார் 2 ஆண்டுகளாக திராவிடக்கழகச் சார்புடைய பத்திரிகையாக நடந்து வருகிறது. உத்தேசமாகச் சொல்லப் போனால் விடுதலைக்கு இவ்வாண்டு பத்தாவது ஆண்டென்று சொல்லலாம். இந்தப்பத்தாவது ஆண்டில் அதற்கு 2000 ரூ. ஜாமீன்கட்ட வேண்டுமென்று சர்க்காரால் ஜாமீன் நடவடிக்கை துவக்கப்பட்டிருக்கிறது. வைதீகமுறையில் இதைச் சொல்லவேண்டுமானால் விடுதலைக்கு 10 வது ஆண்டில் "பாலாரிஷ்டம்" ஏற்பட்டது என்றே சொல்ல வேண்டும். இந்தப் பாலாரிஷ்டம் என்பது தானாக ஏற்படக்கூடிய வியாதி அல்ல. ஜோசிய முறைப்படி ஒரு கெட்ட கிரகத்தின் பார்வை என்று சொல்லுவார்கள். விடுதலைக்கு இன்று கெட்ட கிரகப் பார்வையாக இருப்பது பார்ப்பனீய சர்க்காரின் அடக்குமுறையேயாகும். இந்த அடக்குமுறை என்ற கெட்ட கிரகத்திற்குத் தற்கால சாந்தியாக 2000. ரூ கட்டி கிரகதோஷப் பரிகாரம் என்னும் சாந்தி கழிப்பு செய்ய வேண்டியிருக்கிறது. இந்த 2000 ரூ. கட்டுவதாலேயே விடுதலைக்கு எல்லாக்கெட்ட கிரகப் பார்வையும் இதோடு நின்று விடுமோ அல்லது அதன் உயிரைக் கொண்டு போகும் அளவுக்குத் தொல்லை கொடுக்குமோ என்பதை நம்மால் இப்பொழுது நிச்சயப்படுத்த முடியாவிட்டாலும், அதற்கும் தயாராக இருந்துதான் இந்தக் குழந்தையைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பில் இருக்கிறோம்.

அன்னியன் என்று பெயர் சூட்டப்பட்ட ஆங்கிலேய வெள்ளைக்காரனுடைய ஆட்சியாகிய பிரிட்டிஷ் ஆட்சி இங்கு இருந்த போது, அதைஒழித்து அவர்களை விரட்ட வேண்டும் என்பதான கொள்கையை இந்திய தேசிய காங்கரஸ்சபை கைக்கொண்டதற்குக் காரணம், இந்திய நாட்டில் இந்திய மக்களுக்குப் பேச்சுச் சுதந்தரமில்லை, எழுத்துச் சுதந்தரமில்லை, கருத்துச் சுதந்தரமில்லை என்று சொல்லியே மக்கள் எழுச்சியைத் திரட்டப்பட்டது. இன்றைய காங்கரஸ் ஆட்சி என்னும் பார்ப்பன ஆதிக்க ஆட்சித்தன்மையைப் பார்த்தோமேயானால் அந்த அன்னிய வெள்ளைக்கார ராஜ்ஜியத்தில்தான் திராவிட மக்களுக்குச் சிறிதாவது பேச்சுரிமை, எழுத்துரிமை, கருத்துரிமையும், உத்தியோகப் பிரதிநிதித்துவ உரிமையும், மதக் கொடுமை ஒழிப்புக்காகத் தாராளமாக குறைபாடுகளையும், காரணங்களையும், திருத்த வேண்டிய முறைகளையும், கொடுமையாளர்களையும் வெளிப்படுத்துகிற உரிமையும் தாராளமாக இருந்து வந்ததுஎன்று சொல்லும்படி இருக்கிறது என்பதோடு, இன்றைய சுதந்தர ராஜ்ஜியத்தில் திராவிடர்களுடைய எதிரிகளுக்குத் தாராளமான உரிமையும், திராவிடர்கள்தங்கள் குறைகளை எடுத்துச் சொல்வதற்கே கூடாததான நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது. திராவிடப் பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டு, திராவிடப் பிரச்சாரத்துக்கு 144, திராவிடத் தலைவர்களுக்கு கண்காணிப்பு, காலிகள்தொல்லை, திராவிடச் சின்னங்களுக்குத் தடையும் அவை சட்ட விரோதமானதாக விளம்பரப்படுத்தப்படுதலும், திராவிடக் கொடிகளை எரித்தலும் கிழித்து எறிதலும், திராவிட மக்களுக்கு விரோதமாகப் பார்ப்பனர்கள் கூட்டம் போட்டு, "வாளெடுத்துவெட்டுவோம், துப்பாக்கி யெடுத்துச் சுடுவோம், தெருவில் செல்பவனைக்குத்தித்தள்ளுவோம்" என்று கூறி அப்படிப்பட்ட உணர்ச்சி பார்ப்பனர்களுக் குண்டாகும்படியாகக் கொலை பாதகப் பலாத்காரப் பிரசாரங்கள் செய்வதும் தாராளமாக அனுமதிக்கப்படுகிறது.

"காந்தியாரைக் கொன்றவன் பார்ப்பான்" என்றுஎழுதுவதுகூட குற்றமாகக் கருதப்பட்டு ரூ. 2000 ஜாமீனாகக் கேட்கப்பட்டு விட்டது. இதற்குக் காரணம் சில பார்ப்பனர்களும் பார்ப்பன ஏடுகளும் உலக மறியும்படி சர்க்காரை தூண்டிவிட்டதேயாகும்.

திராவிடநாட்டில் அநேக முக்கிய இடங்களிலுள்ள முக்கிய ஊர்களில் சர்வாதிகாரம் செலுத்தக்கூடிய தலையாய உத்தியோகங்களெல்லாம்பெரிதும் பார்ப்பனர்களுக்கே ஏகபோகமாக இருப்பதை எடுத்துக்காட்டினால் கூட அதற்கு ரூ. 2000 ஜாமீன் கேட்கப்படுகிறது.

ஆனால் 2 பார்ப்பனப் பையன்களுக்குப் பள்ளியில் இடமில்லை என்று ஒரு உபாத்தியாயர் சொன்னால், அந்த உபாத்தியாயரின்

தலையைத் தூக்க வேண்டுமென்று பச்சையாகப் பார்ப்பனர்களும் பார்ப்பன ஏடுகளும் கூப்பாடு போடுவதை அனுமதிக்கப்படுகிறது.

மதுரை, சேலம் முதலிய இடங்களில் திராவிட மக்கள் மகத்தான கஷ்டமும் நஷ்டமும் அடைந்தார்கள். ஈரோடு, எடப்பாடி, திருவண்ணாமலை முதலிய இடங்களில் முஸ்லிம்கள் சித்திரவதைக் கொப்பானவேட்டையாடப்பட்டார்கள். சொத்துக்கள் வெள்ளத்திலும் நெருப்பிலும் ஊழிக் காலத்தில் நாசமாக்கப்படுவதுபோல் நாசமாக்கப்பட்டன. இவைகளுக்குசுய ராஜ்ய சர்க்காரில்ஒரு பரிகாரமுமில்லை. ஆனால்ஏதாவதுஒருஊரில்எங்காவது திராவிடக் கழகத்தாரால் பறையர்-புலையர் என்று சொல்லப்படும்தாழ்த்தப்பட்டமக்களுக்கு அறிவுரையாக சில வார்த்தைகள் சொல்லப்பட்டு விட்டால், திராவிடக் கழகத்தினரால், கருப்புச் சட்டைக்காரனால் அமைதிக் குலைவு உண்டாக்கப்பட்டு விட்டது என்று அதை வைத்துக் கொண்டு, 2000 ரூபாய் ஜாமீன் கேட்கப்படுகிறது.

ஜாமீன் கேட்டிருக்கும் காரணங்களுக்கு இந்த ஒரு உதாரணம்.

15-3-48 ந்தேதி விடுதலை பத்திரிகையில் தாசில்தார், மாஜிஸ்திரேட் டெபுடி சூப்பிரண்டெண்ட், சப்-இன்ஸ்பெக்டர், சர்க்கில் இன்ஸ்பெக்டர், சப்ளை ஆபீஸர், ஜில்லா முனிசீப் ஆகிய உத்தியோகஸ்தர்கள்யாவரும்அய்யர், ஆச்சாரியார், அய்யங்கார், ராவ்ஜிஆகியவர்களாகவே இருக்கிறார்களே என்று குறிப்பிட்டு அய்யய்யோ சீர்காழியே! உன் கதி இப்படியா? என்றதற்கு 2000 ரூபாய் ஜாமீன்.

இப்படியாக அநேக காரியங்களுக்கு அதாவது நம் கொடுமைகளை நாம் எடுத்துக் காட்டாமல் இருக்க முடியாததான பல விஷயங்களுக்கு ஜாமீன் கேட்கப்பட்டிருக்கிறது. இந்த ஜாமீன் துவக்கத்தில் ஏதோ ஜாமீன் கேட்பதாகக் காணப்பட்டாலும் இது முடிவில் விடுதலைப் பத்திரிக்கையை அடியோடு ஒழிப்பதிலேயே நோக்கம் கொண்டு வெளிவந்திருக்கிறது என்பதில் நமக்குச் சிறிதும் சந்தேகமில்லை. அது சாகப்போவதுஎவ்வளவுதான் உறுதியாயிருந்தாலும், அதற்காக நம்மால் கட்டப்படும் பணம் பறிமுதல் செய்யப்படப்போவதுதான் என்பது எவ்வளவு உறுதியாய்க் காணப்பட்டாலும், சாகும் ஜீவனுக்கு சாவது எவ்வளவு உறுதி என்று பட்டாலும் சாகும் வரை செலவு செய்து வைத்தியம் செய்வது எப்படி மனதுக்கு இயற்கையோ, அதுபோல் அதன் முடிவு வரையில் விடுதலைக்குச் செலவும், வைத்தியமும் செய்யவேண்டியது இயற்கையான கடமையாகும். அந்த முறையில் ஒவ்வொருவரும் அதை ஆதரித்து அதற்குத் தங்கள் தங்களால் ஆன அளவுக்கு உதவிசெய்யவேண்டிக் கொள்கிறோம்.

இதற்குமேல் இப்போது நம் முன்னிற்பது இனிநாம் என்ன செய்யவேண்டும்? என்பதாகும். இதை முடிவு கட்டுவதற்குத் தலைவர் பெரியாரவர்கள் தக்க ஒரு நாளை விரைவில் குறிப்பிட்டுவிட்டார்கள். அதற்கு முன்னால் தோழர்கள் 16 ம் நாள் விடுதலையில் பெரியாரவர்களின் கையொப்பதுடன் வெளிவந்திருக்கும் தலையங்கக் கட்டுரையைக் கருத்தூன்றிப் படிக்கவேண்டுகிறோம்.

★

# நிர்வாகக் கமிட்டிக்கூட்டம்.

## பெரியாரவர்களின் அழைப்பு!

### இனி என்ன செய்யவேண்டும்?

★

"விடுதலை" மீது சர்க்கார் எடுத்துக் கொண்டிருக்கும் நடவடிக்கை, நாம் இனி சிறிதும் அலட்சியமாக இருக்க முடியாத, உடனே முக்கியமாய்க் கவனித்து ஒரு முடிவுக்கு வரவேண்டியதற்கேதுவான காரியமாகும்.

இதைப்பற்றி யோசித்து முடிவு செய்யத் திருச்சியில் 24ந்தேதி வியாழக்கிழமை காலையில் தோழர் வேதாசலம் அவர்கள் வீட்டில் நிர்வாகக் கமிட்டிக்கூட்டம் கூட்ட முடிவுகட்டியிருக்கிறது.

இந்த நிர்வாகக்கமிட்டிக் கூட்டத்திற்கு ஆங்காங்குள்ள மற்ற முக்கிய தோழர்களும் அனுமதிமீது கலந்து கொண்டு, தக்க முடிவைச் செய்யப் பேருதவியாய் விளங்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

ஈ. வெ. ராமசாமி.

## வருந்துகிறோம்.

(●)

### தேவர் பிரிவு.

திருச்சித் தோழர் ரெத்தினவேலுத் தேவரவர்கள் 11-6-48ந் தேதி சென்னையில் இயற்கையடைந்த செய்தி யறிந்து மிகவும் வருந்துகிறோம். தோழர் தேவரவர்கள் திராவிட இன இழிவையுணர்ந்தவர்களாய், திராவிட உயர்வே தன்னுணர்வு என்று கருதிப் பாடுபட்டவர். எதிர்ப்புக்கு அஞ்சாத இரும்பு நெஞ்சமுடைய தீரர். இறுதிக் காலத்தில் காங்கரஸில் சேர்ந்தவர் என்றாலும் தன் வகுப்பைக்காட்டிக்கொடுக்காதவராய், அங்கும் அக்கிரகாரக் கும்பல் அலறும்படியாக நடந்து கொண்டவர். இந்து—முஸ்லிம் கலவரம் குறிப்பாகத் திருச்சியில் பூதேவர்கள் தூண்டுதலுக்குப் பிறகும் நடக்கவில்லையென்றால் அதற்குக் காரணம் தேவர் அவர்களே.

இத்தகைய பெருங்குணம் வாய்ந்த தேவர் அவர்களின் மறைவு திராவிட இனத்திற்குப் பெரும் நஷ்டமே. அவரது மறைவால் வருந்தும் குடும்பத்தார்க்கு நமது ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

### வள்ளல் மறைந்தார்.

ராஜா சர் அண்ணாமலை செட்டியார் அவர்கள் தமது 67-வது வயதில் செட்டி நாட்டிலுள்ள தம்முடைய மனையில், இயற்கை எய்திய செய்தி கேட்டுத் திடுக்கிட்டு விட்டோம்.

அயல் நாடுகளில் சென்று பொருள் திரட்டி ஆரியர்களை இந்த நாட்டில் கொளுக்க வைத்து, கோவில் கட்டிக் கும்பாபிஷேகம் செய்வதிலும், பார்ப்பனர்களுக்கே பயன்படக்கூடிய பாடசாலைகளைக் கட்டுவதிலும், தர்ம சத்திரம் கட்டுவதிலும், தானம் கொடுப்

பதிலும் முதன்மையாயிருந்துவந்த நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தில், பொதுவாக எல்லா மக்களுக்கும் பயன்படக்கூடிய காரியங்களைச் செய்யவேண்டுமென்று துணிந்து, பெரும் பொருள் செலவோடு அவற்றைச் செய்து காட்டிய முதல் வழிகாட்டி ராஜா சர் அவர்களேயாகும். அவர் செய்த பலகாரியங்களில், என்றைக்கும் எண்ணக்கூடிய வகையில் திராவிடர்களுக்கு நினைப்பூட்டி வருவது அண்ணாமலைப் பல்கலைக் கழகமாகும்.

பொருள் சேர்க்கும் போராற்றலும், காரியங்களை நிறைவேற்றும் சூழ்ச்சித்திறமும், பயனைப் பகிர்ந்தளிக்கும் பண்பாடும் உடைய ராஜா சர் அவர்களின் மறைவு பொதுவாகக் கல்வித் துறைக்கும், திராவிட சமூகத்திற்கும் மிகப்பெரிய நஷ்டமாகும். அவரின் மறைவால் வருந்தும் அவரின் குடும்பத்தார் அனைவருக்கும் அவரின் உதவியைப் பெற்று உள்ளன்பினால் வருந்தும் ஏனையோருக்கும் நமது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

## தாமஸ் பிரிவு.

சென்னை மதுவிலக்கு, போக்குவரத்து மந்திரியான தோழர் டேனியல் தாமஸ் அவர்கள் மைலாப்பூரிலுள்ள தமது இல்லத்தில், தமது 59-வது வயதில் மறைந்த செய்தியறிந்து வருந்துகிறோம்.

இப்போதைய மந்திரி சபை சிறந்த நிர்வாகத்திறமையும், அறிவு வன்மையும் உடைய ஒரு துணையை இழந்து விட்டது என்றே கூறவேண்டும்.

இவரது குடும்பத்தாருக்கும், இப்போதைய மந்திரிசபைக்கும் நமது அநுதாபம் உரியதாகுக.

# வேண்டுகோள்.

★

விடுதலை தினசரி, இனிமேல் நடைபெற வேண்டுமானால் ரூ. 2000 ஜாமீன் கட்டவேண்டுமாம் இன்றையப் பார்ப்பனஆதிக்கச்சுய ராஜ்ஜிய சர்க்காருக்கு. அதுவும் இன்னும் ஒரு வாரத்திற்குள் கட்டிவிட வேண்டுமாம். ஏன்? எதற்காக? விடுதலை செய்த குற்றம் என்ன? இதைத் திராவிட மக்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

விடுதலையானது இழிசாதி மக்களாக ஆக்கப்பட்டு, சட்டத்தினாலும் அப்படியே நடத்தப்பட்டு வரும் இந்நாட்டுப் பெருங்குடி மக்களின் இழிவு நிலை யொழிக்கப்பட வேண்டுமென்ற லட்சியத்தைக் கைக்கொண்டு அந்த லட்சியத்திற்கு எதிரியாக—முட்டுக்கட்டையாக,—தடைகல்லாக இருந்து கொண்டு, நிமிஷத்திற்கு நிமிஷம் தன் வடிவத்தை—போக்கை மாற்றிக்கொண்டு வரும் பார்ப்பனியத்தின் உண்மையை—எதேச்சாதிகார ஆணவத்தை—உயர் சாதி அகங்காரத்தை—பிறவி முதலாளித் தன்மையை மாற்றிக்கொண்டுவிட வேண்டுமென்று, அதற்கான உண்மை ஆதாரங்களை எடுத்துக்காட்டி, பலாத்கார உணர்ச்சியைப் பரப்பாமல்—ஏன் பலாத்கார உணர்ச்சியை அடக்கி அழித்து விடும்படி தொண்டு செய்துவரும் ஒரே ஒரு தினசரிப் பத்திரிகையாகும்.

இப்படிப்பட்ட விடுதலைக்கு ஜாமீன் கேட்டதற்குக் காட்டியிருக்கும் ஆதாரங்களிலிருந்து, திராவிடர் கழகமே இந்த நாட்டில் இருக்கக்கூடாது; பெரியாரவர்களின் பேச்சே நடைபெறக்கூடாது; திராவிடர்கள் தன்மானத்தோடு வாழக்கூடாது என்றுதான் ஆட்சியாளர்கள் சொல்லாமல் சொல்லுகிறார்கள் எனலாம். இதற்கு அடுத்து நாம் செய்ய வேண்டியது என்ன? அதைத் தலைவர் பெரியார் அவர்களும் நிர்வாகக் கமிட்டியாரும் முடிவு கட்டுவார்கள்.

இப்பொழுது திராவிட மக்கள் என்ன செய்யவேண்டும்?

திராவிடர்களின் ஒரே குரலான விடுதலையை நெரிக்கத் தலைப்பட்டிருக்கும், அதிகார மமதைமிக்க இரும்புக்கைகளை, உங்கள் உழைப்பின் உருவான வெள்ளித் தோட்டாக்களைக் கொண்டு துளைத்துவிடவேண்டும்—தளரச் செய்யவேண்டும். விடுதலையை நெரிப்பது எங்களை நெரிப்பது; இந்தப் பயங்கரமான அநீதி மிக்க செயலை எப்பாடுபட்டேனும் நாங்கள் தடுப்போம் என்கிற செயலைச் செய்து காட்டவேண்டும்.

இன்னும் ஒருவாரகாலமே தான்! இதற்குள் திராவிடத் தோழர்கள் ஆங்காங்கு பொருள் திரட்டி அனுப்பிவிடவேண்டும்! இரண்டாயிரத்தைச் சேர்த்துவிட்டார்கள் என்பது இதற்குப் பொருளல்ல! "நாம் கைக்கொண்ட அடக்கு முறை விடுதலைக்கல்ல திராவிடத் தன்மான வளர்ச்சிக்கு என்பதாகத் திராவிட மக்கள் உணர்ந்து விட்டார்கள். இதன் விளைவு என்ன ஆகும்" என்று பார்ப்பன ஆதிக்கம் சிந்திக்க வேண்டும். பணம் அனுப்பவேண்டிய முகவரி:—

சா. குருசாமி, 'விடுதலை' சென்னை.

## கடமையைச் செய்தவர்கள்.

### ஜாமீன் பண்டு வசூல்.

★

விடுதலை ஜாமீன் பண்டு அறிக்கையைக் கண்டவுடன்

சேலம் ரோசு அருணாசலம் ரூ. 50.

மு கோ. அங்கப்ப செட்டியார் ரூ. 50. அனுப்பி வைத்திருக்கிறார்கள் எனத்தெரிகிறது.

(5ம் பக்கத் தொடர்ச்சி)

கேட்ட கேள்விகள் காளியண்ணனை "உனக்கு இதற்குள் புரியாது குழந்தை" என்று பதில் கூறும்படிச் செய்துவிட்டு அதே நிமிடத்தில் கொந்தளிப்புக்கு அடிகோலும்.

* *

இதுவரை காளியண்ணன் தன் முதுகால் எத்தனையோ மூட்டை அரிசிகளை முதலியாரின் கடையிலிருந்து வீட்டுக்குக் கொண்டு போய்ப் போட்டிருக்கிறான். ஆனால் இதுவரை அம் மூட்டைகள் எங்கு செல்கின்றன என்பதை யோசித்தது கிடையாது. ஆனால் ஆறுமுகம் பிறந்தான். "ஏன்? எதற்கு?" என்ற கேள்விகள் பிறந்தன.

அதன் விளைவுதான் சபாபதி முதலியாரின் கள்ளமார்க்கட் வியாபாரம் காளியண்ணனுக்கு இருளிலே வைத்த தீபம்போலப் புலப்பட்டது.

இரவு நெடுநேரம் காளியண்ணன் படுக்கையில் உருண்டு கொண்டிருந்தான். தூங்கவில்லை—தூங்க முடியவில்லை.

"பொங்கலுக்குப் புதுசா சொக்

காய், நைனா''—ஆயிரம் தடவை ஆறுமுகம் பேசினான் காளியண்ணனின் மனக்கண்முன். பிள்ளைப் பாசம் ஓர் புறம். பழியச்சம் மறுபுறம். இவை இரண்டிற்கும் இடையே காளியண்ணன். "குழந்தையின் ஆசையைப் பூர்த்தி'' செய் என்றது அவனது தந்தையுள்ளம். குழந்தை ஆசையைப் பூர்த்தி செய்யவாவேண்டும். அது எப்படி உன்னால் ஆகும். உன்னிடம் காசு இல்லையே...... ஆம் காசு இல்லை......அப்படியாயின் எப்படிப் பூர்த்தி செய்வாய்... 'திருடத்தான் வேண்டும்' திருடுவதா...சட்டம், சட்டமிருக்கிறது ஜாக்கிரதை......உண்ட வீட்டிற்கு இரண்டகமா...துரோகி......யார் துரோகி...நான் மாத்திரம் தானா திருடுகிறேன். பெரிய பெரிய பணக்காரர்களெல்லாம் பகல் கொள்ளையடிக்க வில்லையா?... வருவது வரட்டும்...என்னால் ஆன மட்டும் பார்க்கிறேன்.'' என்றது அவனது உள்ளுணர்வு.

* *

நடுநிசி. அகல் விளக்கின் சுடர் எண்ணெய் வற்றிவிட்ட காரணத்தால் காற்றில் 'ஆநந்தமாக' ஊசலாடிக் கொண்டிருந்தது. திடீரென்று ஏதோ ஓசை.

அஞ்சலை விழித்துக்கொண்டாள். அவள் கண்கள் ஆறுமுகத்தைத் தேடின. அவன் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தான். தன் கணவன் படுத்திருந்த பக்கத்தை நோக்கினாள். "ஆம்.........! அவனே தான்......அவள் கணவன் காளியண்ணனே தான்......'' காளியண்ணன் பதுங்கிக்கொண்டு வந்தான் சுவர் ஓரமாக. அவன் எதையோ ஒன்றைக்கெட்டியாகப் பிடித்துக்கொண்டிருந்தான். ஆம் அஃதோர் வைரமாலை. அந்த வைரமாலையில் கற்கள் ஒளிவிட்டன. அந்த கற்கள் மட்டுமா இல்லை. அவன் கண்கள்கூட!

"அய்யோ இது ஏது உனக்கு''

"முதலியார்... குழந்தை... மாலை'' என்று குழறிவிட்டு ஒரு சிரிப்புச்சிரித்தான் காளியண்ணன்.

அடுத்த வினாடி அஞ்சலை வீல் என்று கத்தினாள். ஓர் முரட்டுக் கை காளியண்ணனின் கழுத்தைப் பற்றிற்று. அஞ்சலை 'தொப்' பென்று விழுந்தாள்.

அவள் தன்னுணர்வு பெற்று எழும்போது காளியண்ணன் அங்கு இல்லை. ஆறுமுகம்தான் அழுதுகொண்டிருந்தான்.

"சித்திவினாயகா, என் பங்கிலே நீதாண்டா இருக்க வேண்டும். என் புருசனை என்னண்டை கொண்டு வந்து சேரப்பா'' என்று தான் அஞ்சலை சித்திவினாயகரை வேண்டினாள். ஆனால் அவரென்ன செய்வார், நீதி தேவன் தான் குற்றம் சாட்டித் தண்டித்து விட்டாரே!

காளியண்ணன் 'கைதி'யானான். சிறையில் தள்ளப்பட்டான்.

அவனுக்கும், உலகத்திற்கும் இடையே பலமான இரும்புக் கம்பிகள்!

அஞ்சலை பிள்ளையாரை வைதாள்.

ஆறுமுகம் சபாபதி முதலியாரை வைதான்.

உலகம் காளியண்ணனை வைதது. ஆனால் குற்றம் யார் மேல்.

---

# ★ நாமிருவர். ★

★

முறைத்துப் பார்க்காதே தோழனே! நான் அவ்வளவு கெட்டவனல்ல வென்பதை நீ இன்னும் உணராமல் இருக்கிறாயே! நான் உன் உடன் பிறந்தவன் என்பதை ஏன் மறந்து விடுகிறாய்? நான் உன் எதிரியா? இல்லையே. உனக்குத் தெரியாமல் எத்தனை காரியம், உன் நன்மைக்காகவே செய்கிறேன் என்பதைக் கொஞ்சம் நெஞ்சிலே கையைவைத்து, உன் அறிவுக்ும் கொஞ்சம் வேலை கொடுத்துப் பார்! அப்பொழுது தெரியும்! அதிலும் விளங்கா விட்டால் நான் செய்யும் குற்றங்களையாவது உன் அறிவென்னும்துலாக்கோலைக் கொண்டு ஆராய்ந்துபார்! அப்பொழுதாவது தீர்ப்புக் கிடைக்கிறதா இல்லையா என்பது தெரியும்.

நான் வாய்க்கால் வெட்டுகிறேன், நீ தண்ணீர் கொண்டு வருகிறாய். நான் காடு மேடாக உள்ள தரிசு நிலங்களைச் சமமாக ஆக்குகிறேன், நீ அதிலே வரப்புகள் அமைக்கிறாய். நான் அதிலே நல்ல விதைகளை ஊன்றுகிறேன், நீ கதிர்களை அறுக்கிறாய். நான் நல்ல சமையல் செய்கிறேன், நீ அதை வயிறுபுடைக்கச் சாப்பிடுகிறாய். இவைகள் தானே தம்பி! உனக்கும் எனக்கும் உள்ள வித்தியாசங்கள். நீ எண்ணிப்பார்க்கிறாயா? என்னை ஏன் எதிரியாகவே இன்னும் பாவித்துக் கொள்ளுகிறாய் என்று தானே கேட்கிறேன்?

பல ஆண்டுகளாக நாங்கள் செய்த பிரச்சாரங்கள் எங்கள் நலனுக்காகவா செய்து கொண்டோம்? நாங்கள் என்ன மந்திரிப்பதவிக்கு ஆசைவைத்தா அல்லது ஜில்லா போர்டு முனிசிபாலிட்டி இம்மாதிரி பட்டம் பதவிக்கு ஆசை வைத்தா? எங்கள்பிரச்சாரத்தை, உன் ஏவலாளரின் தாக்குதலினால் கண்ணையும், காலையும், எங்கள் உயிரையும், உன்முன் பணயமாக வைத்துத் தொடர்ந்து நடத்திக் கொண்டு வந்தோம். நாங்கள் என்ன பலனை உன்னிடம் எதிர்பார்த்து எங்கள் உயிரையும், உள்ளத்தையும், நேரத்தையும் வீணாக்கிக் கொண்டு திரிந்தோம்? கொஞ்சம் சிந்தனைக்கு வேலை கொடுத்துப்பார் தோழனே!

கைகால்களை அமுக்கிவிடப் பத்தாள். கட்டியங்கூற நிற்கப்பத்தாள். பஞ்சணை மெத்தையைப் பக்குவப் படுத்தப் பத்தாள். அறுசுவையுண்டியை அள்ளி அன்போடு ஊட்டிவிட ஆள். பாராளும் மன்றத்தார் பார்ப்பதற்கு வாயில் காப்போனிடம் விடை கேட்டு நிற்கும் தகுதி. இத்தனை தகுதியையும் அடைந்து வாழக்கூடிய எங்கள் தொண்டுக் கிழவனை, உனக்காக, உன் நன்மைக்காக உண்ணவும் உறங்கவும் நேரமின்றி, தன்னுடைய தள்ளாத வயதில் ஆயிரமாயிரம் உபாதைகள் தன் உடம்பிலே தேள்போல் கொட்ட இரவுபகல்என்றும், காடுமேடு நகரம் கிராமம் என்றும்,வாழ்வு தாழ்வு (கல்யாணம் கருமாதி) என்றும் பாராமல் திரியும்படி உனக்காக நாங்கள் தந்திருக்கிறோமே, நினைத்துப் பார்த்தாயா? தோழனே! யாருடைய நன்மைக்காக உழைக்கிறோம், அப்பனே! ஏன் எங்களைக் கண்டு மிரளுகிறாய், தம்பி!

எங்கள் உடலிலே இருக்கும் கருப்பு உன் ராமராஜ்ஜியத்தையே கருகச் செய்துவிடுமென்று பயப்படுகிறாயா? தோழனே! உன் உள்ளம் கருத்திருக்கிறதென்று தான்,என் உடலைக்கருப்புத் துணி கொண்டு மூடி இருக்கிறேன். உன் உள்ளம் வெள்ளையானால் என் உடலும் வெள்ளையாகும் தம்பி!

தியாகம் என்ற சீட்டாட்டத்திலே நீ, ஜாதியை வைத்துக்கொண்டு வெட்டுகிறாயே, அதைப் பின்னாலிருந்து சொல்லிக் குறுக்கிடுவோம் என்று பயப்படுகிறாயா? ஒருக்காலும் நினைக்காதே, அப்பனே! உன்னால் இருட்டடிக்கப்பட்ட தூத்துக்குடியிலே, ஒன்றரை லட்சம் உள்ளங்களுக்கு இருதயம் போன்ற எங்கள் பெரியார் ராமசாமி கூறிவிட்டாரே, நாங்கள் அரசியலிலே நுழைவதில்லை யென்று. அதைக் கொட்டை எழுத்துக்களில்

பார்த்தாயே தம்பி! இன்னுமா எங்கள் மீது சந்தேகப்படுகிறாய்? நாற்றமெடுத்து அழுகிப் புரையோடிப் புழு உண்டாகி இருக்கும் உன் புண்களை ரண சிகிச்சை செய்து ஆற்றிவிடும் மருத்துவர்கள் என்று நினைத்துக் கொள் தம்பி! கல்லும் முள்ளும் நிறைந்து மேடும் பள்ளமும் உள்ள தரிசு நிலத்தைப் பண்படுத்தி,முத்தாக விளைய வைக்கும் உழவனென்று நினைத்துக் கொள் தம்பி! குப்பையும் கூளமும் சேறும் சகதியும் நிறைந்த உன் அழகிய திரு நகரத்தைச் சுத்திசெய்ய வந்த தோட்டிகள் என்று வைத்துக்கொள் தோழனே!

இவைகளை நினைக்க நேரமில்லாவிட்டால், நீ இன்னும் எத்தனை ஆயிரம் ஆண்டுகள் இருந்தாலும் இந்த மீளா நரகத்திலிருந்து வெளியேறமுடியாதென்பதை நினைவிலே வைத்துக் கொள் அன்பனே!

எங்களுடைய நன்மைக்கா தோழனே நாங்கள் இவ்வளவு கஷ்டப்படுகிறோம்? வாழவந்த கூட்டம் வாளேந்தத்துணியும் அளவுக்கு உன் கோழைத்தனம் மிஞ்சிவிட்டதே என்றுதானே தோழனே நாங்கள் வெட்கப்படுகிறோம்.

உடன் பிறந்த சகோதரர்களை மலேயாவுக்கும் சிங்கப்பூருக்கும் அனுப்பிவிட்டு, உழைத்து உழைத்து உடல் தேய்ந்து போனாயே. அந்த உடல் பெருத்த உன்மத்தரைக் கேட்டாயா தம்பி! யார்மீது வாளேந்துகிறாய்? என்று. மாலை நேரத்தில் தோள்மீது மண்வெண்டி சார்த்தி, ஒட்டிய வயிற்றோடு ஊரை நோக்கி நடக்கும் அந்த உழைப்பாளியையும் பார்! அதே நேரத்தில் ஆற்றோரத்தில் கையைத் துணிகொண்டு மூடி, முழங்கால் தண்ணியிலே நின்று முணுமுணுக்கும் மற்றோர் உருவத்தையும் பார்! உடலை மறைக்கப் போதுமான ஆடையின்றிக், காற்றில் பறக்கும் கந்தல் ஆடையை இழுத்துக் கையில் பிடித்துக்கொண்டு, எண்ணை கண்டறியாத பரட்டைத் தலையோடு கஞ்சிக்கலையத்தைக் கையில் கொண்டு செல்லும் உன் சகோதரியையும் பார்! அதே நேரத்தில் பட்டாடை சலசலக்க, பாதசரம் தாளமிட, பலவிதப் பூ வாசனை பரிமளிக்க நறுநகையாள் பொற்குடத்தை எந்திப் போகும் ஒய்யாரத்தையும் பார்! நன்றாகப்பார்! தோழனே! உனக்கு ரத்தக் கண்ணீர் வரவில்லையா? அன்பனே!

அதோ மாடி வீட்டையும் பார்! மண் குடிசையையும் பார்! உடலசையாமல் செல்லும் மோட்டாரையும் பார்! தலையைக் கொடுத்து நெட்டித் தள்ளிக் கொண்டு செல்லும் கைவண்டிக்காரனையும் பார்! பலவித உணவைத் தின்று ஜீரணிக்க முடியாமல் படுத்துப் புரளும் உருவத்தையும் பார்! கஞ்சி இன்றித் தெருவோரத்தில் மயங்கிக் கிடக்கும் மற்றோர் உருவத்தையும் ப்பார்! விதவிதமான ஆடையுடுத்தி உல்லாசமாக ஒதுங்கிப் போகும் சிறுவர்களையும் பார்! ஆடையின்றி வாடையில் மெலிந்து, மண்ணில் புரளும் உன் குழந்தையையும் பார்! மின்சார விசிறிக்கடியிலே உட்கார்ந்து 51 பார்க்கர் பேனாவைக் கையில் பிடித்திருக்கும் அந்த உருவத்தையும் பார்! பக்கத்திலே இடதுகைப் பெருவிரலிலே மையை அப்பிக்கொண்டு, "எந்த இடத்திலே வைக்கட்டுங்கோ" என்று கேட்கும் உன் சகோதரனையும் பார்!

இரண்டு ஆட்களை வைத்து மூச்சு விடமுடியாமல் இழுத்துக் கொண்டு ஓடுகிறானே, அவனையும் பார்! பலவித மலர்க்குவியல்களுக்கிடையே உல்லாசமாகப் பவனிவரும் அந்தச் செப்புச் சிலையையும் பார்! சரிந்த கூரையையும் பார்! வானளாவி நிற்கும் கோபுரங்களையும் பார்! பார்! நன்றாகப்பார்! பார்த்துச் சிந்தனை செய்! செய்து ஒரு முடிவுக்குவா!

இந்த ஏற்றத் தாழ்வுகள் இருக்கத்தான் வேண்டுமா? தோழனே! இவைகளைக் கண்டு உன்மனம், உன்ரத்தம் கொதிப்படையவில்லையா? அன்பனே!

இவைகளைப் போக்கும் பணியிலே நாங்கள் ஈடுபட்டால், எங்களைத் தூற்றுவதுதானா தோழனே! நீ எங்களுக்கு அளிக்கும் பரிசு?

தூத்துக்குடி கண்டும் நீ தூரவிலகி இருக்கலாமா? தோழனே! தோளோடு தோள் சேர்த்து நம் உரிமையைப் பெற முயற்சிப்போம், அன்பனே! கருப்புச் சட்டையைக் கண்டு கருத்தைச் சிதறவிட வேண்டாம்! கைகோத்து நடப்போம்!. கர்ம வீரன் பெரியார் அமைப்பிலே பங்குகொள்வோம்! கதியற்று நிலை குழைந்து கிடக்கும் திராவிட நாட்டைச் செம்மைப்படுத்துவோம் என்று சூளுரைப்போம்! சூதுரைக்கு மயங்கி இனியும் எம்வளமார் திராவிடத்தை மாற்றானிடம் அடகு வைத்திருக்கச் சம்மதியேன் என்று துள்ளி வந்து என்னை இறுகத் தழுவிக்கொள் தோழனே! இனிநாம் இருவரும் எதிரி அல்ல, எதிர் காலவீரர் என்று. எங்கே? வா பார்க்கலாம்.

"இளையோன்"

# 2000 கொடு! மிரட்டுகிறது சர்க்கார்.

## கனத்த கூலில் கேட்கும் காலிக்கும் மிரட்டிப் பணம் கேட்கும் சர்க்காருக்கும் என்ன வித்தியாசம்?

### தடைக்கு அடுத்தபடி ஜாமீன்! இதற்கு அடுத்தபடி என்னவோ?

★

(நமது நிருபர்) ஈரோடு ஜூன் 14.

விடுதலைப் பதிப்பாசிரியரும் வெளியிடுபவருமான தோழியர் மணியம்மையாருக்கு, கீழ்க் குறிப்பிட்ட நாட்களில் விடுதலையில் வெளிவந்த செய்திகளை வெளியிட்டதற்காக, ரூ 2000 ஜாமீன் கட்ட வேண்டுமென்று டெபுடி-கலெக்டர் மூலம் இன்று நோட்டீஸ் சர்வ் செய்யப்பட்டது.

ஜனவரி மாதம் 2, 4, 9, 17, 18, 19, 20, 23, 25.

பிப்ரவரி மாதம் 12, 14, 16, 20, 21.

மார்ச் மாதம் 6, 7, 8, 9, 11, 12, 13, 15 ந்தேதி ஆகிய நாட்களில் வெளிவந்த தலையங்கம், பெரியாரவர்களின் பேச்சுகள், குத்தூசி கட்டுரைகள், அய்யய்யோ சீர்காழி போன்ற குறிப்புகள் ஆகிய அனைத்துமே பத்திரிக்கை அவசரச் சட்டத்தின் கீழ் வரக்கூடியனவாம்.


## நாம் சூத்திரரா?

இதன் ஆசிரியர் இச்சிறு நூலில் யார் சூத்திரர் என்பதை ஆராய்கிறார்.

தனி இதழ் அணா 4.

தபால் கூலி அணா 1.

வியாபாரிகளுக்குத் தக்க கழிவுண்டு.

முத்தமிழ் நூலகம்
ஆம்பூர் (கிளை)
சென்னை மாவட்டம்.

(4ம் பக்கத் தொடர்ச்சி)

நாயகப் போக்குக்கு முரணான முறையில் "இந்திய அரசியல் நிர்ணய சபை என்ற பெயரால் டில்லியில் கூடுகின்ற சபை திராவிட மக்களின் பிரதிநிதித்துவம் பெற்றதல்லவென்றும், திராவிட மக்களை எந்த வகையிலும் கட்டுப்படுத்தக் கூடியதல்ல'' வென்றும் கூறினோம்.

### வருங்காலப் பிரச்னைகள்.

நாம் நம்முடைய கோரிக்கையை அடைய புரட்சிப்பாதையில் வெற்றிகரமாக முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கிறோம். நமது லட்சியக் கோரிக்கை "திராவிட நாடு திராவிடருக்கே'' என்பதாக இருந்தபோதிலும், நாட்டு மக்களின் நலத்திற்குத் தீங்கு விளைவிக்கும் அரசியல் சட்டதிட்டங்களையும், சமுதாய அமைப்பிலுள்ள குறைபாடுகளையும், பொருளாதாரத் துறையிலுள்ள ஏற்றத் தாழ்வுகளையும் போக்கும் விஷயங்களிலும் தலையிடவேண்டிய கடமையைப் பட்டிருக்கிறோம். உதாரணமாகவகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைநீக்கிவிடவேண்டும் என்றுமந்திரியசர்க்கார் கூறுகிறார்கள். இதற்கு அவர்கள் காட்டும் காரணம் மதச் சார்பற்ற சர்க்கார் நடத்தவேண்டும் என்பதுதான்.'' ஆண் பெண் என்ற பேதம் இருப்பது போல் பார்ப்பனன்—சூத்திரன் என்கிற பாகுபாடுகள் இருந்துதான் தீரும், இது கடவுளால் உண்டாக்கப்பட்டது'' என்று ஒரு மாநாடு கூட்டித் தீர்மானம் செய்கிறார்கள் திமிர் பிடித்த பார்ப்பனக் கூட்டத்தினர். இந்த நிலை அழிந்து போகாமல் பாதுகாத்தும் வருகிறார்கள். இது போன்று மத மாற்சரியங்களையும் பேதா பேதங்களையும் வளர்க்கப்பட்டு வரும் நாளில், மக்கள் எல்லோருக்கும் நியாயமாக கிடைக்கவேண்டிய உரிமைகளும், உரிய பங்கும் கிடைக்கவேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் ஏற்படுத்தப்பட்டிருக்கும் வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறை நீக்கப்படுமானால்,அதைஎதிர்த்துப்போராடி திராவிட மக்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான உரிமைகளைப்பெற்றுத்தரக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அடுத்த படியாக "சமயம் வரும் பொழுது புல்லேந்தும் கை வாளேந்தும் என்பதை நிரூபிக்க வேண்டும்'' என்று கூறுகின்றார்கள் புல்லேந்து போர்வீரர்கள்! உண்மையிலேயே அவர்களுக்கு வாளேந்தும் சந்தர்ப்பம் கிடைக்க வேண்டும் என்றுதான் ஆசைப்படுகிறேன். புல்லேந்தும் கை வாளேந்தும் பொழுது தான் அச்சுக்கூடத்தில் எழுத்துக்கோக்கும் தொழிலாளர் முதல் அரசாங்கப் பணிமனையில் பேனா பிடிக்கும் அத்தனை பேருடைய கைகளும், கழனியில் ஏற்றம் பிடிக்கும் கைமுதல் கல்லூரியிலே ஏடுபிடிக்கின்ற கைகளும், திராவிட நாட்டிலுள்ள ஆண் பெண் அத்தனை பேருடைய கைகளும் போர்வாள் ஏந்தியே தீரும். போர்க்களம் பல வற்றில் வெற்றிவாகை சூடிய திராவிடவீரர்களின்வாள், இரத்தவெள்ளத்தில் பார்ப்பனப் பிணங்கள் துடித்துத்துடித்து மிதந்தோடுகின்ற நேரத்தில் பதில் சொல்லப்போகிறது.அந்தப் பதில் "திராவிடத்தில் பார்ப்பனீயம் அழிக்கப்பட்டது. ஆரியத்தின் அடிச்சுவடே ஒழிந்து விட்டது''என்றுதிராவிட நாட்டுச் சரித்திரத்தில் எழுதப்பட வேண்டியதாகத்தான் இருக்கும்.

அடுத்தபடியாக நமக்கு முன்னிற்பது, இந்தி மொழி பள்ளிகளில் புகுத்தப்படுவதை எதிர்த்துப் போராடுவதுதான். 1937-38ல் திராவிடத்தில் நடந்த மொழிப் புரட்சி நியாயமாகப் பொறிக்கப்பட வேண்டிய இடம் உலக வரலாற்றில்தான். நமக்குத் தெரிந்த வரை தாய் மொழி வளர்ச்சியைத் தடுக்கும் வகையில் வேற்றுமொழி புகுத்தப்பட்டபொழுது அதை எதிர்த்து ஆயிரக்கணக்கான இளைஞர்களும், தாய்மார்களும் சிறை சென்றதும், தாளமுத்து நடராசன் ஆகிய இரு வீரர்களின் உயிர் இந்தியின்பலிபீடத்தில்காவு கொடுக்கப்பட்டதும், தமிழைப் பாதுகாக்க இந்தியை எதிர்த்துத் திராவிடத்தில் நடைபெற்ற மொழிப்புரட்சியிலேதான். இந்தப் போராட்டத்தைஆரம்பித்துச்சிறை சென்று போராடி இந்தியை ஒழித்து வாகை சூடிய பெரியார் ராமசாமி இன்றும் இருக்கிறார். இந்தியைப் பள்ளியில் புகுத்த முயற்சிக்கிறார்கள். முடிவு எப்படியிருக்கும் என்பதை இன்று கூற முடியாவிட்டாலும் காலம் நிரூபித்துக் காட்டும்.

இறுதியாக நமக்கிருக்கும் கடைசிப் போராட்டம் அரசியல் நிர்ணய சபையின் நிர்ணயங்களை திராவிடத்தில் புகுத்தும் பொழுது அதை எதிர்த்துப் போராடுவது தான். இதுதான் நமது லட்சியக் கோரிக்கையாகவிருக்கும். திராவிட நாடு பிரிவினைக்கு நாம் செய்யப் போகும் புரட்சிக்கு ஆரம்பமாகவிருக்கும் என்று நம்புகிறேன்.

### போராடுவோம்.

திராவிடத்தில் திக்கெட்டும் சிதறிக் கிடக்கும் திராவிட மக்களின் சக்தியைஒன்றுதிரட்டித்திராவிடக் குடியரசை அமைக்கப் போராடுவோம்! இறுதிவரை போராடுவோம்! நம்முடைய உடலில் ஓடுகின்ற இரத்தத்தில் ஒரு அணுவின் துடிப்பு இருக்கும் வரை போராடுவோம்!

வாழ்வில்வளமிழந்துவாடித்தவிக்கும் நாலரைக்கோடி திராவிட மக்களின்வாழ்வுவளம்பெற்றுப் பூத்து, மலர்ந்துபுது வாழ்வுபெறப்போராடுவோம்!

மாற்றானால் அடிமையாக்கப்பட்டுஇயற்கை வளங்கள்சுரண்டப்பட்டு சூம்பிக்கிடக்கும் திராவிடத்தை வளமிக்க பொன்னாடாக மாற்றி அமைக்கப் போராடுவோம்!

வளமிக்க திராவிடத்தில் பிறந்தும் வாழ வழியின்றி வேற்று நாடு சென்று வீரத்தையும் மானத்தையும் விட்டு விட்டு, அடிமைகளாக வாழும் ஆயிரக்கணக்கான திராவிட மக்களைச் சொந்த நாட்டிற்கு மீண்டும் அழைத்துச் சுகவாழ்வு பெற்றுத் தரவேண்டும் என்பதற்காவும் திராவிடத் தனிக் குடியரசு அமையவேண்டும் என்று கூறுகிறோம். இதற்காக உயிரையும் பணயம் வைத்துப் போராட உறுதி கொள்வோம்.

நியாயமான முறையில் அமைதியான வழியிலேயே ஆட்சியாளர் திராவிடத்தைத் தனிநாடாகப்பிரித்து விடாவிட்டால், மமதை மிக்க ஆட்சியாளரின் அதிகார பீடத்தில் ஆயிரக்கணக்கான திராவிடர்கள் சிரித்துக்கொண்டே பச்சை ரத்தம் பரிமாறித்திராவிடக்குடியரசை அமைப்போம் என்று திராவிட நாடு பிரிவினை நாளில் உறுதி கொள்வோம். நமது லட்சியத்திராவிடக் குடியரசுஅமையப் போவது உறுதி!

"புத்ததாசன்''

---

**மண்டி வரும் எதிர்ப்பு!**

**மலையாதே! வாகை சூடு!**

# எப்படிப் புரிந்தாரோ?

★

''புரட்சி, புரட்சி என்று கூச்சல் போடுகின்றார்களே சிலர்! புரட்சி! புரட்சி என்றால் எனக்கு ஒன்றும் புரியவில்லையே! புரட்சி எங்கே? சுவரிலா? சுவரிலேயே எழுதிப் புரட்சி செய்து விடுவதா? இது ஆகுமா? நடக்குமா? தர்மமா? இன்னொன்று தீவிரவாதியாம். தீவிரவாதி என்றால் என்ன? முற்போக்கு வாதியாம், பிற்போக்கு வாதியாம்! இவைகளெல்லாம் எனக்கு ஒன்றும் புரியவில்லையே! ஒழிக என்று கூச்சல் போடுகிறவன் தீவிரவாதி, போடாதவன் பிற்போக்கு வாதியா? அப்படிப் பார்த்தால் ஈரோட்டுப் பெரியார் இருக்கிறாரே அவர் கடவுளை ஒழிப்பதில் மிகத் தீவிர வாதிதான்; அவரை வெல்ல யாராலும் முடியாது; ஆனால் அரசியலில் பிற்போக்குவாதியா?''

மேலே கண்ட வாசகங்களைப் படிக்கும் தோழர்களுக்கு என்னமோ உளறிக் கொண்டு போகிறான் என்று தான் தோன்றும். ஆனால் அன்பர்களே இவைகள் என்னுடைய வாசகங்களல்ல; தமிழ்நாடு காங்கரஸ் கமிட்டித் தலைவர் திரு. காமராஜரின் சொற்பொழிவின் சில வாசகங்கள். சென்ற வாரம் (10—5—48) திங்கட்கிழமை சேலம் விக்டோரியா மார்க்கட் மைதானத்தில் பலமக்கள் கூடிய கூட்டத்திலே அவர் ஆற்றிய சொற்பொழிவு.

திரு. காமராஜர் காந்தீயத்தில் கரை கண்டவர். வாழ்நாள் பெரும் பகுதியைத் தேசத்திற்காகச் செலவிட்ட தியாகி. சாணக்கிய வம்சத்து ஆச்சாரியாரோடு போரிட்டு வெற்றி கண்ட வீரர்; மந்திரி சபையை மனோ வேகத்தில் மாற்றியமைக்கும் தீரர்; பார்ப்பனர் என்றாலே பாரேன் என்று வீராவேசத்துடன் காரமாகக் கூறுபவர். (நம்மவர்களோடல்ல; காங்கரஸ் குழுவில்) வெள்ளையனை வெளியே துரத்திவிட்டுத்தான் வேறு வேலை பார்ப்பேன் என்று வீராப்புப் பேசியவர். நீங்காத சுதந்தர தாகம் கொண்டலைந்தவர். அந்த காமராஜர் பேசுகிறார் புரட்சி என்றால் புரியவில்லை என்றும் முற்போக்கு வாதிக்கும், பிற்போக்கு வாதிக்கும் அர்த்தம் தெரியவில்லை என்றும் அங்கலாய்க்கின்றார். புரியவில்லையாம் அவருக்கு! இந்தப் புரியவில்லை என்பதைத்தான் அவர் தொடர்ந்த காங்கரஸ் தொண்டில் புரிந்துகொள்ள முடிந்தது போலும். எவ்வளவு அழுத்தம் திருத்தமாகக் கூறுகின்றார் அவர்; புரியவில்லை என்று. அவருக்கே அது புரியவில்லையே பின் ஏன் அதுபற்றிப் பேசுகிறார், புரியாத பொருள்களைப்பற்றிப் பேசுவதற்கா அவர் வந்தார். அவருக்கே புரியாததைப்பற்றிப் பேசுவதைப் பார்க்க, கேட்க பலர் கூடியிருக்கின்றனர்.

அடுத்தபடியாகத் தொடர்ந்து கூறுகிறார், ஈரோட்டுப் பெரியார் கடவுளை ஒழிப்பதில் மிகத் தீவிரவாதி என்றும், அரசியலில் பிற்போக்குவாதி என்றும். பாருங்கள் தோழர்களே! ஒரு பொறுப்புள்ள தலைவர் எவ்வளவு நெஞ்சழுத்தமாக முன்னுக்குப் பின் முரணான கூற்றுகளைக் கூறுகின்றார் என்று. தீவிரவாதி, பிற்போக்கு வாதி என்பவைகளைப் புரிந்து கொள்ளாத காமராஜர், பெரியார் விஷயத்தில் தீவிரத் தன்மையையும் பிற்போக்குத் தன்மையையும் பகுத்துணர்ந்து கொண்டார் என்றால் இந்த அதிசயத்தை யாரிடம் சொல்லுவது. முற்றிலும் புரியவில்லை என்று கூறினாரே அத்துடன் நிறுத்தியிருந்தால் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை. அந்தப் புரியாதவைகள் அடுத்த நிமிஷமே ஒரு மாற்றுக்கட்சி, எதிர்கட்சி, நாஸ்தீகக்கட்சி என்று கூறப்பட்ட கட்சித் தலைவரின் விஷயத்தில் புரிந்து கொள்ள முடிந்தது என்றால், அந்தத் தலைவரின் பெயரை உச்சரித்ததும் புரிந்து கொண்டாரா? அல்லது குறை கூறுவதற்கு என்றே புரியாதவைகளைப் புரிந்து கொண்டது போல் பாவனை செய்து கொண்டாரா? என்பதுதான் நமக்குப் புரியவில்லை. தமக்குப் பிடிக்காதவர்களைப் பிற்போக்கு வாதி என்று கூறுவதும், தமக்குப் பிடித்தவர்களை வேறு யாரேனும் பிற்போக்கு வாதி என்று கூறக்கேட்டால் அவைகள் புரியாமல் போவதற்கும் காரணம் என்னமோ? ஒன்று அதாவது வாய் உண்மையைக்கூறக் கூசவேண்டும் அல்லது அவரது நெஞ்சே நினைக்க மறுத்திருக்கவேண்டும் அல்லது அவற்றில் ஏதேனும் குறையிருக்கவேண்டும்.

மாற்றுக்கட்சி கண் கொண்டு, குறை கூறவேண்டும் என்ற குறிப்போடு, ஏசுதலை வீசவேண்டும் என்ற எண்ணத்தோடு புரியாத பொருளைப் புரிந்து கொள்ளாமல் புரியாது பேசுகின்றார். என்னே அவர்தன் புரியாத பொருள்! இதைக் கேட்பவருக்குக் கேலிச் சிரிப்பாகத்தான் தோன்றும். ஆனால் அதைக் காமராஜர் பேசுகின்றார். மக்கள் அவர் முன்னிலையில் கூடியிருப்பதை அவர் பார்த்தாரோ பார்க்கவில்லையோ? அவருக்குத்தான் புரியவில்லையே எப்படிப் பார்த்திருப்பார்?

அதோடு விட்டாரா? ஒரு வெடி குண்டையும் அங்கு கூடியிருந்த மக்களின் மேல் வீசினார். என்ன? யாரும் இறக்கவில்லையா? என்று கேட்கின்றீர்களா? இந்த நாட்டில் (இந்தியாவில்) முதலாளிகளே இல்லையாம். அப்படி இருப்பதாகக் கூறவேண்டுமானால் சமஸ்தான அரசர்களைத்தான் கூறவேண்டுமாம். மைசூர் மகாராஜா, திருவாங்கூர் மகாராஜா, கொச்சி மகாராஜா, ஹைதராபாத் மகாராஜா இவர்கள் தான் இந்நாட்டின் முதலாளிகளாம், காமராஜரின் அரசியல் அகராதிப்படி இந்த நான்கு சமஸ்தானங்கள் தான் அவருக்குத் தெரிந்ததோ என்னமோ நாமறியோம். இந்த அதிசயமான முதலாளிகளை மட்டும் எப்படிப் புரிந்துகொண்டாரோ என்பது நமக்குப்புரியவில்லை. இந்த நாட்டில் முதலாளிகள் இல்லையாம் எவ்வளவு நெஞ்சமிழ்ந்த பொய் (?) காமராஜர் பேசுகிறார். இவரின் அகராதியில் வரும் முதலாளிகள் டாடா, பிர்லா, பஜாஜ், டால்மியா, கொயங்கா போன்ற முதலாளிகளில் அய்ந்தில், பத்தில், பதினைந்தில் ஒரு பகுதிகூட இருக்கமாட்டார்கள். அந்த டாடா கூட்டத்தை முதலாளிகள் பட்டியலிலேயே சேர்க்கமறுக்கின்றார் திரு காமராஜர். இது சரியா? தர்மமா? என்று அவர் மொழியிலேயே கேட்கின்றோம்.

இத்துடன் விட்டாரா? இல்லை. ''தொழில்களை யெல்லாம் அரசாங்கம் எடுத்துக்கொள்ளவேண்டும்'' என்பது பற்றியும் சில கூறினார். தனிப்பட்ட முதலாளிகள் நான்கு அல்லது அய்ந்து மோட்டார்களை வைத்திருக்கின்றார்களாம். இதை நிர்வாகம் செய்வதும், கணக்குப் பார்ப்பதும் சுலபமாம். ஆனால் அரசாங்கம் அதை ஏற்றுக்கொள்ளுமானால் நூறு, இருநூறு மோட்டார்கள் சேருகின்றதாம். இதைவைத்து நிர்வாகம் செய்வதும் கணக்குப் பார்ப்பதும் கஷ்டமாம். அதனால் இது அரசாங்கத்திற்கு ஒரு பெரிய தொல்லையாம். இந்தமாதிரி கஷ்டங்களை ஏற்றுக்கொள்வது சரியா? இப்படித் தொல்லைப்படும் சர்க்கார் எப்படி மக்களின் நலனைக் காப்பாற்ற முடியும்? என்று காங்கரஸ் தலைவர் காமராஜர் கேட்கின்றார். காமராஜரின் அரசியல் ஞானப்படி போக்குவரத்துச் சாதனங்களை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளக்கூடாது. அது தனிப்பட்ட முதலாளிகளிடமே இருக்க வேண்டும். அரசாங்கம் அதன் வரவு செலவு கணக்குகளைக் காணமுடியாது என்பதாகும். இது முதலாளிகளின் உரிமைகளைப் பாதுகாக்கவல்லவாம். அவர் தான் கூறுகின்றாரே முதலாளிகள் என்போர் இந்த நாட்டில் இல்லை என்று. எவ்வளவு பகிரங்கமாகப் பலர் முன்னிலையில் முதலாளிகளுக்கு வக்காலத்து வாங்குகிறார்? திரு காமராஜர், உங்களுக்குத் தெரியுமா? தற்பொழுது

# மானங்கெட்டவன்!

★

“அவன் மானங்கெட்டவன். பார் ஆளை! பெரிய சூரனாட்டம்; இன்னொருவனை இழுத்துக் கொண்டு போய்விட்டாள் மனைவி, மறுபடியும் அவளையே வைத்துக் கொண்டு குடும்பம் நடத்துகிறான் முட்டாள்! உயிரை வைத்துக் கொண்டிருக்கிறானே! நானாய் இருந்தால் அவளைக் கொலை செய்து விடுவேன்!”

ஊர் பேசிற்று. முருகனின் காதில் இவைகள் விழாமல் இல்லை! இருந்தும் ஏனோ தலையைக் குனிந்தவாறே நடந்து சென்று கொண்டிருந்தான். அவன் மனம் வேதனையில் ஆழவில்லை. சிந்தனையில் மூழ்கிக்கிடந்தது. நடைப் பிணமென நடந்தான் இல்லம் நோக்கி!

* *

இருபது வயதுக் காளையாக இருந்தபோதெல்லாம் முருகன் எத்தனையோ பேர்களைக் குறை கூறியிருக்கிறான். அதோடு மட்டுமல்ல! அவன் முன்கோபக்காரன், இழி சொல் பொறுக்கமாட்டான். ஆனால் இன்று “மானங்கெட்டவன்” என்ற பழிச்சொல்லைச் சுமந்து கொண்டுதான் நடந்து செல்கிறான்.

ஆள் அழகுதான். நல்ல உயரம். மாநிறம் அவன்! அவளோ (அவனின் மனைவிதான்) ஒரே கருப்பு. அழகி என்று சொல்ல முடியாது. இருந்தும் முருகனை அவளுக்குப் பிடிக்கவில்லை. நல்ல சேலைகள் வாங்கித்தந்தான். சோற்றுக் கவலையில்லை. அவளுக்குத் தேவை எது எதுவோ அவ்வளவும் அன்போடு அளித்தான். இருந்தும் அவளுக்கு அவனைப் பிடிக்கவில்லை.

* *

மறுநாள் முருகனின் வீட்டின் முன்பு ஒரே கூட்டம்! வீட்டினுள்ளே முருகனின் பிணம்! இறந்து கிடந்தான்!! போலீஸ் அதிகாரி கையில் ஒரு கடிதம் இருந்தது. அவர் கண்கள் கடிதத்தின்மீது ஓடிக் கொண்டிருந்தன. அவர் வாயும் சிறுக முணுமுணுத்தது. அதில் நம் காதில்விழுந்தவை...... இதோ......!

“நான் மானங்கெட்டவன்! மானமிழந்தவன் உயிரோடு வாழக் கூடாது தான்! ஆனால் என் மனது மானத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்யவில்லை. என் மனைவி ஒருவனுடன் ஓடி விட்டாள். உண்மை! நான் அவளை மீண்டும் வைத்துக் குடும்பம் நடத்தக் கூடாதுதான்......... நான் எண்ணியதெல்லாம் வேறு... அவளை அவனுடன் சேர்த்து விடுவது. இல்லையேல் அவளுக்குச் சாவுமணி அடித்து விடுவது என்று நினைத்தேன். ஆனால் அதற்குள் என்மனம் வெடித்து விடும் நிலைமைக்குக் கொண்டுவந்து விட்டது சமூகத்தின் பாணம். இனிமேல் என்ன சொன்னால்தான் என்ன? இதோ விஷம்!

இப்படிக்கு, முருகன்.

அதோ நிற்கிறாள் அவனின் மனைவி. மக்கள் ஏசுகின்றனர். “விபசாரி, கல்மனம் படைத்தவள், நாசமாய்போக, பார் அம்மா வாசை போலப் பசப்புக் கண்ணீர் வடிக்கிறாள்” கூட்டத்திலிருந்து எழுகின்றன!

அவளோ பேசவில்லை. தலையை நிமிர்த்தவேயில்லை. கண்கள் தரையை நனைக்கின்றன. இதனிடையே அவளின் வாக்கு மூலத்தை அறிய ஆவலடைவது இயல்புதானே. ஆனால் அவள் தான் பேசவில்லையே!............

* *

“அவர் என்னிடம் அன்பாய் தான் இருந்தார். வேண்டியவை எல்லாம் உடன் வாங்கித் தந்தார். ஆனால்....அவர் என் இளமைக்கு விருந்து அளிக்கவில்லை. அங்கத்துடிப்புகளுக்குச்சாந்தி அளிக்கவில்லை! அளிக்காதது அவர் குற்றமல்ல. உடலின் இயற்கையமைப்பு அப்படிச் செய்து விட்டது.

நான்தான் இருக்கிறேனே பாவி! என்னால் என்னை அடக்க முடியவில்லை. மனோ எழுச்சிகள் தலை தூக்கி ஆடும்போது அறிவு மங்குவது இயல்புதானே! நான் சாதாரண ஒரு மானிடப்பெண். படிப்பு வாசனை அறியாதவள். அவன் இருக்கிறானே வரதன் என் வறண்ட வாழ்வில் குறுக்கிட்டான்.

எங்கள் வீட்டிற்கு வருவான். அவருடன் பேசிக்கொண்டு இருப்பான். இடையே என்னை அரைக் கண்ணால் பார்ப்பான். நானும் பார்க்காததுபோலப் பார்ப்பேன்! இப்படி எத்தனை நாளைக்கு!

எனக்குக்காமவெறி தலைக்கேறி விட்டது! அதன் பயன்!.........வரதனும் நானும் இன்பவெள்ளத்தில் மிதந்தோம். என் காமப்பசிக்கு நல்லவிருந்தாக அவன் இருந்தான். பின் கள்ளக் காதலர்களாக மாறினோம். ஓர் நாள் இரவு. வரதன் வரவுக்காகக் காத்துக்கிடந்தேன். அவர் வீட்டிலில்லை. பன்னிரண்டு மணி இருக்கும். வரதன் வந்தான். அவன் கையில் சிறிய மூட்டை ஒன்று இருந்தது. “இது என்ன?” என்றேன். “இன்பபுரிப் பயணத்துக்கு உதவி கண்ணே!” என்றான். “புறப்படு” என்றான். “உம்” என்றேன். பறந்தோம்.

பிறகு? பிறகு என்ன? என் கணவர் என்னைவிட்டபாடில்லை. அவரது முயற்சியால் நான் இல்லம் வந்தடைந்தேன். நான்வந்த பிறகு அவரைப் பார்ப்பதற்கே பயமாகத்தான் இருந்தது. என் உயிருக்கு ஆபத்து என்று நினைத்துக் கொண்டிருந்தேன்! ஆனால் .........உங்களுக்குத்தான் தெரியுமே! என் வாழ்க்கை வறண்ட பாலைவனம்! பாலை வனத்திடையே தோன்றும் சோலைதான் வரதன். சோலையை விட்டு மீண்டும் பாலைவனப் பிரயாணம் வரதனின் பிரிவு! இப்போதோ பாலை வனத்தில் பெரும் சூறாவளி!...”

அவள் சொல்லவில்லை. சோகம் கப்பிய முகத்திலிருந்து நமது படப்பிடிப்பு.

மா. கிருட்டினன்.

---

சென்னையில் மோட்டார் போக்குவரத்தை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு என்ன கஷ்டப்படுகிறதென்று அங்கு கூடியிருந்தவர்கள் எவருக்குமே தெரியாது. ஆனால் காமராஜர் புரிந்து கொண்டார். அதை எப்படிப் புரிந்து கொண்டாரோ தெரியவில்லை. மிகச் சிறிய விஷயங்களைப் புரிந்துகொள்ள முடியாத காமராஜர் மிகச் சிக்கலான பிரச்னைகளை எப்படிப் புரிந்து கொண்டாரோ!

“மு. ராஜமாணிக்கம்”

---

**இந்து மதம் என்பது எது? சொந்தப் புத்திக்கொண்டு சொல்லு!**

# எமது தீர்ப்பு.

★

## பகுத்தறிவியக்கத்தின் பழமை.

ஆசிரியர் டி. எஸ். ஸ்ரீபால்.
வெளியிட்டோர்:—
மகாவீர ஜைன சங்கம்.
2/2பெரிய செய்யக்காரன் தெரு,
சென்னை.

பகுத்தறிவியக்கத்திற்கு அடிகோலியவர் சமண சமய முதல்வர். அவரின் திருநாமம் விரஷப தேவர். [திவ்வியமான திராவிட மணங்கமழுகிறதல்லவா?] அவர்தான் உலகத்திற்கே முதல் முதலான பகுத்தறிவின் வழிகாட்டி. இவர் திராவிடர். இதற்கு ஆதாரம் வேதம், புராணம் மொகஞ்சதாரோ ஆகிய எங்கு வேண்டுமானாலும் காண்க என்கிறார் இதன் ஆசிரியர். இதற்கு விலை இல்லை. அன்பளிப்பாகக் கிடைக்கும்.

## பூர்ண ஸ்வராஜ்.

(ஆங்கில வார வெளியீடு)
ஆசிரியர் எஸ். அயிராவ்தம்.
தனிஇதழ் 0-1-0 ஆண்டுக்கு 3-0-0
19 சவுத்டேங்க் ஸ்குவர், நுங்கம்பாக்கம்.
சென்னை.

ஜாதி, வகுப்பு நலம் கருதாது எந்த ஈஸத்திற்கும் விரோதமின்றி காந்திஜி நிலை நாட்டிய ராமராஜ்ஜியம் தழைத்தோங்கப் பாடுபடத் தோன்றியிருப்பது இந்தப் பூரண சுவராஜ்.

## வெற்றி.

தமிழ்—இங்கிலீஸ்
வர்த்தக மாத இதழ்.
ஆசிரியர் டாக்டர் வெற்றி.
தனிஇதழ் 0-0-6. ஆண்டுக்கு 0-8-0.
போஸ்ட்பாக்ஸ் 3. திருநெல்வேலி.

வியாபார வெற்றிக்கு விளம்பரமே சாலச் சிறந்தது என்ற குறிக் கோளுடன் வர்த்தக சம்பந்தமான எல்லா விளம்பரங்களையும் தாங்கிச் சென்ற பத்தாண்டுகளாக வெளி வருகிறது இந்த வெற்றி. வர்த்தக முறைக்குப் பெரும் வெற்றியைக் கொடுக்கும் என்பதுறுதி.

---

விற்பனைக்குத் தயார்!

## வாழ்விலோர் திருநாள்

"ஆசிரியர்:- கே. பாலையா"

திராவிடர் வாழ்வில் ஒரு திருநாள் தூத்துக்குடி. இத்திருநாள் திராவிட வரலாற்றில் இணையற்ற, மகத்தான, பெருங்காட்சி. இக்காட்சியை அழகுபடச் சித்தரிக்கிறது இந்நூல்.

விலை அணா நான்கு.
வியாபாரிகளுக்குக் கமிஷன் உண்டு.
கிடைக்குமிடம்:—
பாலு சைக்கில் ஷாப், கரூர்.
நாதன் கம்பெனி, ஈரோடு.

---

படித்து விட்டீர்களா?

## மொழி—எழுத்து.

பெரியாரவர்கள் "மொழி" என்னும் பொருள் குறித்தும், "எழுத்து" என்னும் பொருள் குறித்தும், கும்பகோணம் அரசியலார் கல்லூரியிலும் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியிலும் ஆற்றிய விரிவுரைகளின் தொகுப்பு.

விலை நான்கணா.

★

## திராவிடக் கழக லட்சியம்.

பெரியாரவர்களின் இரு சொற்பொழிவுகளும் ஒரு அனுபவஸ்தரின் உண்மை விளக்கமும் அடங்கியது.

விலை நான்கணா.
வியாபாரிகளுக்குக் கமிஷன் உண்டு.
கிடைக்குமிடம்:—
நாதன் கம்பெனி லிமிடெட், ஈரோடு.

---

[3ம் பக்கத் தொடர்ச்சி]

இந்து மதம் இருந்து வருகிறது என்பதை எவரும் மறுக்க முடியாது.

இந்த லட்சணத்தில் உள்ள இந்து மதம் ஒருமனிதனைத்தீண்டக்கூடாதவன் என்றும், ஒரு மனிதனைத் தாசி மகன், வைப்பாட்டி மகன், அடிமை மகன் என்றும் சொல்லிக்கொண்டு உரிமையும் பாராட்டி 100க்கு 97 மக்களைச் சுயமரியாதையற்றவர்களாக்கி 100க்கு 25 மக்களைத் தீண்டாதவர்கள், சண்டாளர்கள் என்று இழிவுபடுத்தி வருவதென்றால் இப்படிப்பட்ட இந்த மதம் உலகத்தில் எதற்காக இருக்கவேண்டும்? இது அடியோடு ஒழிக்கப்படுவதில் என்ன தப்பு? என்றுதான் கேட்கிறோம்.

ஜாதி அகம்பாவம் பிடித்த சோம்பேறிப்பார்ப்பனீயக் கூட்டம்தங்களது சுயநலங்களை உத்தேசித்து இந்து மதம் ஒழியச் சம்மதப்படமாட்டார்கள் என்பதோடு "இந்து மதத்தை ஒழிக்க உன்னாலும் முடியாது உங்கள் பாட்டனாலும் முடியாது" என்று சொல்லுவார்கள். ஆனால் அது வேறு விஷயம். தீண்டப்படாத வகுப்பைச் சேர்ந்த ஒரு ஆள் இந்து மதத்தை விட்டுவிடுகிறேன் என்றும், "சண்டாளர்கள்" "இழிமக்கள்" என்று சொல்லக்கூடிய ஒரு கூட்டமக்களின் மகாநாட்டில் "இந்து மதத்தை விட்டுவிடவேண்டும்" என்று ஒரு தீர்மானம் செய்தவுடன், இமயமலை முதல் கன்னியா குமரி வரையில் உள்ள தேசீயத் தலைவர்கள் தேசீயப் பத்திராதிபர்கள் மகாத்மாக்கள் மாளவியாக்கள் இந்து மதத்தலைவர்கள் "வீரர்கள்", "தியாகிகள்". "சத்தியாக்கிரகிகள்" எல்லோருக்குமே தலையில் இடி விழுந்தது போல் ஆகிவிட்டதுடன் இதற்காக எத்தனை பொய் புரட்டு, ஏமாற்று, தந்திரம் ஆகிய இழி காரியங்கள் எல்லாம் செய்து, "அம்பேத்கார் அவ்வளவு பெரிய மனுஷன் அல்ல" என்றும், "பம்பாய் மாகாண தீண்டப்படாதார் மகாநாடு தக்க பிரதிநிதித்துவம் பொருந்தியது அல்ல" என்றும், தாங்கள் கூப்பாடு போடுவது போதாமல் அவ்வகுப்பிலேயே பல வயிற்றுச் சோற்றுக்குக் கருப்பன்களைப் பிடித்து ஒரு கிராம் இரண்டு கிராம் சாராயம் வாங்கிக்கொடுத்து எழுதச் சொல்லியும், எழுதினதாக ஒப்புக்கொள்ளச் சொல்லியும், இவ்வளவு பாடுபடுவதைப் பார்க்கும் போதே முடியாது என்று சொல்லுபவர்கள் உண்மையாக நம்புகிறார்களா அல்லது பயந்து நடுங்கி அப்படி உளறுகிறார்களா என்பது விளங்கும்.

இந்து மதம் நாளுக்கு நாள் ஒழிகிறதா இல்லையா என்பதும், பிறமதம் நாளுக்கு நாள் ஓங்குகிறதா இல்லையா என்பதும், ஒரு 50 வருஷம் ஜனகணிதத்தைப் பார்த்தால் தானாகவே விளங்கும்.

ஆகையால் இந்து மதத்தை ஒழிக்க வேண்டுமென்று முயற்சி செய்தவர்கள், இப்பார்ப்பனர்களுடைய மிரட்டலுக்குப் பயப்படாமல், சித்திரத்தில் படம் எழுதக்கூட ஒரு இந்துவின் பழய சின்னம் இல்லாத அளவுக்கு, இந்து மதம் என்னும் புரட்டான ஒரு கட்டும் சூழ்ச்சியும் அழிய வேண்டியது அவசியம் என்றும் அது அழிந்துபோகப் போவது உறுதிதான் என்றும் தைரியமாய்க் கூறுவோம்.

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42, Cutchery street, ERODE